மலர்-2 இதழ்-43 ஜூன் 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை

**உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்**




## மிகப்பெரிய கையால் செய்யப்பட்ட

# கைலாஷ் மலை

# இயற்கையாகவே சிவனுக்கு அபிஷேகம் செய்யும் நாகலிங்க மலர்

சிவபெருமான் அபிஷேகப் பிரியர், பெருமாள் அலங்காரப்பிரியர் என்று பக்தர்கள் நன்கு அறிவர். இதன் காரணமாக அபிஷேகப் பிரியரான சிவபெருமானுக்கு ஆலயம் எழுப்பும் போது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விதத்தில் சிவ சன்னதியில் லிங்கத்தின் மேலே நீர் சொட்டும் பாத்திரம் ஒன்று வடிவமைக்கப்பட்டிருக்கும். இந்த பாத்திரத்திலிருந்து ஒருசிறு சொட்டு தண்ணீர் தொடர்ச்சியாக சிவபெருமான் மீது பட்டு அபிஷேகம் செய்வதாக ஐதீகம். இது போன்ற அமைப்பில்தான் பல ஆலயங்கள் கட்டப்பட்டன.

ஆனால் சிவனின் மீது அதீத பற்றுக் கொண்ட ஒருசிலரின் சிந்தனை வேறு மாதிரியாக இருந்தது. 'இந்த பாத்திரத்தில் எப்போதும் தண்ணீர் இருந்தால்தான் சிவ பெருமானின் மீது தொடர்ச்சியாக தண்ணீர் விழும். ஆனால் பாத்திரத்தில் நீர் நிரப்பாதபோது தண்ணீர் விழுவது நின்று போகுமே' என்று எண்ணியதின் விளைவுதான். சிவாலயம் கட்டும்போது மூலஸ்தானத்தில் சந்திர காந்த கல்லால் கட்டினர்.





இந்த சந்திரகாந்த கல் காற்றில் உள்ள ஈரப்பதத்தை ஈர்த்து 24 விநாடிக்கு ஒருமுறை சிவபெருமான்மீது தண்ணீர் சொட்டு சொட்டாக விழும்.

இதனால் சிவபெருமானுக்கு தொடர்ச்சியாக அபிஷேகம் நடைபெறும் என்பதால் ஒருசில கோவில்களின் மூலஸ்தானத்தில் சந்திரகாந்த கல் பொருத்தப்பட்டது.

இது சிவபெருமான்மீது ஏற்பட்ட அதித பக்தியால் செயற்கையாக உருவாக்கப்பட்ட வழிமுறையாகும்.

ஆனால் இயற்கையாக ஒரு மலர் தொடர்ச்சியாக சிவ பெருமானுக்கு அபிஷேகம் செய்வதாக உருவாகியுள்ளது.

அந்த மலரின் பெயர்தான் நாகலிங்கமலர்.

இந்த நாகலிங்க மலரின் மேற்கூறையில், சின்னச் சின்ன ஆட்டணா இருக்கும் அந்தத் தும்பித் தாரையில் இருந்து 24 வினாடிக்கு ஒருமுறை ஒரு பனித்துளி அளவு தண்ணீர் லிங்கத்தில் விழும் அதிசயம் நடைபெறுகிறது.

மேலும் இந்த மலர் குடி கொண்டுள்ள நாகலிங்க மரத்தை தொடர்ந்து நாம் தரிசனம் செய்தால் நம் உள்ளுள் காலசக்தியையும், கால உணர்வையும் இயங்க வைக்கும்.

நாகலிங்க புஷ்பத்தை ஆலய பூஜைக்கு அளித்தல் மிகப்பெரிய புண்ணிய காரியம் ஆகும்.

பல பிரதோஷ வழிபாட்டுப் பலன்களை ஒருங்கே தர வல்லதே இறைவனுக்கு நாகலிங்க பூவால் செய்யும் பூஜை.

நாகலிங்க மரம் இயற்கையான யோக அக்னியைப் பூண்டது, நாகலிங்கப் பூவை மரத்தில் இருந்து பறிக்கும்போது கைக்கு இதமான, உஷ்ணமாய் இருப்பதை உணர்ந்திடலாம்.

ஒவ்வொரு நாகலிங்கப் பூவும் உள்கூட்டுடன் இருக்கும் இதுவே யோகபுஷ்ப தவச்கூடு ஆகும்.இதன் ஸ்பரிசம் மனித மூளைக்கு மிகவும் நல்லது.

ஒவ்வொரு நாகலிங்க பூவும் சூரிய, சந்திர கிரணங்களின் யோக சக்தியை கொண்டு மட்டுமே மலர்கின்றது என்ற அறிய செய்தியை நாகசாலிச் சித்தரும், நாகமாதா சித்தரும் பூவுலகிற்கு மீண்டும் உணர்த்தினார்கள்.



நாகலிங்க பூவை இறைவனுக்கு சமர்ப்பிக்கலாமே தவிர தலையில் வைக்கக்கூடாது. பூஜைக்கு மட்டுமே இந்த மலரை பயன்படுத்தவேண்டும். சிவ பூஜைக்கு மட்டும் பயன்படுத்துவது சிறப்பிலும் சிறப்பாகும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த நாகலிங்க மரம் ஆலமரம் போன்று மிக பிரம்மாண்டமாக படர்ந்து இருக்கும் ஒரு திருக்கோயில் சென்னையில் அமைந்துள்ளது.

சென்னை, கோடம்பாக்கத்தில் திருவலிதாயம் என்று போற்றப்படும் பாரத்வாஜேஸ்வரர் ஆலயத்தில் அமைந்துள்ள நாகலிங்க மரம் மிகப் பழமையான மரமாகும். இம்மரத்திற்கு தனியாக பீடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நாகலிங்க மரத்தின் மற்றுமொரு சிறப்பு இந்த மரத்தின் வேர் இத்திருக்கோயில் அமைந்துள்ள கோடம்பாக்கத்தின் எல்லை வரை பரவியுள்ளதாக கூறப்படுகிறது.

வாய்ப்பு கிடைக்கும்போது இத்திருக்கோயிலுக்கு சென்று சொர்ணாம்பிகை சமேத பாரத்வாஜேஸ்வரரை வழிபட்டு இந்த நாகலிங்க மரத்தையும் வணங்கி ஆசிபெற்று வாருங்கள்.

## வைரஸ் கிருமிகளை கட்டுப்படுத்தும் மூலிகை

# நிபாவை தடுக்கும் பவளமல்லி இலை



தற்போது ஒருசில வருடங்களாக வைரஸ் கிருமிகளின் தாக்குதல் அதிகரித்த வண்ணம் உள்ளது. வருடம் தோறும் புதுப் புது வைரஸ் கிருமிகள் உருவாகி மனிதர்களை தாக்குவதும், அதனால் ஒருசில உயிரிழப்பு நிகழ்வதும் தொடர் கதையாக உள்ளது.

கொசுக்கள், விலங்குகள், பறவைகள் போன்றவற்றை தாக்கும் வைரஸ் கிருமிகள் மனிதர்களையும் தாக்கி மனித குலத்திற்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது.

இதுபோன்ற பிரச்சனைகளை ஏற்கனவே நமது முன்னோர்கள் அனுபவித்துள்ளனர். அதற்கு அவர்கள் இயற்கை பொருளையே மருந்தாகவும் பயன்படுத்தி பலன் அடைந்துள்ளனர். பிற்காலத்தில் இதுபோன்ற பிரச்சனை ஏற்படாதவண்ணம் மக்களை காக்க வேண்டும் என்பதால் சித்த புருஷர்கள் மருத்துவ குறிப்புகளாக அவற்றை எழுதி வைத்து சென்றுள்ளனர்.

ஆனால் நாம் அவற்றை பாதுகாக்காமல், அவற்றை பயன்படுத்தாமல் விட்டதன் விளைவு தான் தற்போது பல்வேறு நோய்க்கிருமிகள் நம்மை தாக்கிக் கொண்டுள்ளன.

இந்தவகையில் நோய்க் கிருமிகள் அண்டாமல் தடுக்கும் எளிமையான முறை:

கருங்காலிக்கட்டை, வன்னிக்குச்சி, வன்னி இலைகளை சிறிய துணியில் கட்டி வீட்டு வாசலில் தொங்குமாறு வைக்கவேண்டும். அல்லது வீட்டில் ஏதாவது ஒரு இடத்திலில் வைத்தால் வைரஸ் கிருமிகள் அழிக்கப்படும்.

வேலைக்கு செல்பவர்கள், வெளியூர் பயணம் மேற்கொள்பவர்கள் கூட, மேற்கண்டவற்றில் சிறிதளவு சட்டைப்பையில் அல்லது கையில் வைத்துக் கொண்டால் வேறு எந்த வைரஸ் கிருமியும் நம்மை தொற்றாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.


கருங்காலிக்கட்டை


வன்னி இலை


வன்னிக்குச்சி

குழந்தைகள் பள்ளிக்கு செல்லும்போது மேற் கண்டவற்றை சிறிதளவு ஒரு சிறு துணியில் கட்டி அவர்களின் பாக்கெட்டில் வைப்பது அவர்களை பாதுகாக்கும்.

### நிபா வைரஸ் கிருமியை அழிக்க உதவும் பவளமல்லி இலை:

தற்போது தென்னிந்தியாவை குறிவைத்து பரவிவரும் வைரஸ் கிருமியானது நிபா. இந்த வைரஸ் கிருமி கேரள மாநிலத்தில் ஒருசிலரின் உயிரை பறித்துள்ளது. தற்போது இந்த வைரஸ் கிருமிக்கு மருந்து கண்டுபிடிக்கவில்லை என்பது அதிர்ச்சியான செய்தியாக இருந்தாலும், மற்ற மாநிலங்கள், இந்த வைரஸ் கிருமி பரவாமல் தடுக்க வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த வைரஸ் கிருமி நம்மை தாக்காமல் இருக்க நம் முன்னோர் ஏற்கனவே அற்புதமான இயற்கை மருந்துகளை ஏடுகளில் எழுதி வைத்து சென்றுள்ளனர். அகஸ்தியர் போன்ற மாமுனிவர்கள் கூறிய மருத்துவ குறிப்புகளின்படி, இந்த நிபா வைரஸ் கிருமிகளைப் போன்ற ஏனைய வைரஸ் கிருமிகளை அழிக்கும் சக்தி ‘பவளமல்லி இலை கஷாய’த்திற்கு உண்டு.

இந்த கஷாயம் தயாரிக்கும் முறை:

மிக ஸ்லிம்மாக எரியும் அடுப்பில் 200 மில்லி அளவு தண்ணீரை வைத்து, அதில் பவள மல்லி இலைகளை 5 எண்ணிக்கை எடுத்து, நன்றாக சிறிய துண்டுகளாக நறுக்கி போட வேண்டும், 200 மில்லி அளவுள்ள நீர் 100 மில்லி நீராக சுண்டும் வரை அடுப்பில் வைக்க வேண்டும், அதில் 3 முதல் 5 எண்ணிக்கையில் மிளகை நசுக்கி போட வேண்டும், எலுமிச்சை சாறு 3 முதல் 4 சொட்டுக்கள்விட்டு நன்றாக கிளறிவிட வேண்டும். தற்போது கஷாயம் தயாராகிவிட்டது.

அடுப்பில் இருந்து இறக்கியதும் அந்த கஷாயத்தை வடிகட்டி ஒரு நாளைக்கு 3 முறை அல்லது 4 முறை குடித்து வந்தால் நிபா வைரஸ் மட்டுமல்ல வேறு எந்த வைரஸூம் தாக்காமல் நம்மை பாதுகாக்கும்.

– ஸ்ரீ சஞ்சீவி ராஜ சுவாமிகள்
+91 9600396444, 9600397444


ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 ஜூன் 2018 5
www.aanmeegamalar.com





# சிவ பக்தர்களால் புதுப்பிக்கப்பட்ட

# நாகநாதர்

நாகை மாவட்டம், திருக்குவளை வட்டம் திருமறைச்சேரி என்ற இடத்தில் பல நூறு ஆண்டுகள் முன் சோழர்களால் கட்டப்பட்டு பின் சமணர்களால் இடிக்கப்பட்டு, வழிபாடு இல்லாமல் இருந்த திருக்கோயில் நாகநாதர் திருக்கோயிலாகும்.

இவ்வாலயம் பாழடைந்த நிலையில் இருந்ததை பற்றி நமது இதழில் கடந்த வருடம் படங்களுடன் செய்தியாக வெளியிட்டிருந்தோம். மேலும் இந்த ஆலயத்தின் திருப்பணிகளை ஒருசில ஆன்மிக அன்பர்களின் பெரும் முயற்சியால் இத்திருக்கோயில் தற்போது புதுப்பொலிவுடன் பொலிவுற்று. புதிதாக திருக்கோயில் கட்டப்பட்டுள்ளது.

இக்கோயிலின் சிறப்பு, நான்கு வேதங்கள் வழிபட்ட ஆலயமாகவும், இராகு கேது நிவர்த்தி ஆலயமாகவும், சூரியன் வழிபடும் ஆலயமாகவும் விளங்குகிறது. (பங்குனி 4 முதல் 10 வரை சூரிய கதிர் இறைவனை வழிபடுகிறது).

மேலும் கைலாயத்தில் மட்டுமே இருக்கும் சிவகரந்தை எனும் வாசனை நிரம்பி செடி, திரும்றைச்சேரி எனும் புண்ணிய பூமியில் மட்டுமே உள்ளது. இங்கிருந்துதான் தமிழகத்தின் பல்வேறு சிவாலயங்களில் சிவராத்திரியின் மூன்றாம் காலப் பூஜைக்காக எடுத்துச் செல்கின்றனர்.

நேர்மறை சக்திகளை முழுவதும் உள்ள டக்கி மேலும் பல சிறப்புகள் வாய்ந்தது இத்திருக்கோயில்.

பாழடைந்த இத்திருக்கோயில் புதுப்பிக்கப்பட்டு விளம்பி வருட்ம் வைகாசி மாதம் 21ம் நாள் (04.02.2018) திங்கள் கிழமை திருவோணம் நட்சத்திரத்தன்று காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் கடக லக்னத்தில் இறைவன் அருளால் குடுமுழுக்குப் பெருவிழா நடைபெறவிருக்கிறது. ஆலய தொடர்புக்கு 09840063124, 09080224250 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.








ஆன்மிகமலர் மெயில் புக்

# 1000 ஆண்டுகளாக கட்டப்பட்ட ஆலயம்

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் மொத்த கட்டமைப்பும் கட்டிமுடிக்க சுமார் 1000 ஆண்டுகள் ஆகி இருப்பது கல்வெட்டுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள் கடந்த காலத்தைக்காட்டும் கண்ணாடி. திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் நூற்றுக்கணக்கான கல்வெட்டுகள் உள்ளன.

தமிழ், சமஸ்கிருதம், கன்னடம் ஆகிய மொழிகளில் இந்த கல்வெட்டுகள் உள்ளன. இந்த கல்வெட்டுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதை சொல்வதாக உள்ளன.

திருவண்ணாமலை ஆலயத்தின் சிறப்புகள், ரகசியங்களில் பெரும் பாலானவை இந்த கல்வெட்டுகளில் இருந்துதான் வெளி உலகுக்கு தெரிய வந்தன. அது மட்டுமல்ல, திருவண்ணாமலை ஆலயம் சுமார் ஆயிரம் ஆண்டுகளாக கட்டப்பட்ட ஒன்று என்ற தகவலும் கல்வெட்டுகள் மூலம்தான் தெரிந்துள்ளது.

இத்தனைக்கும் அங்குள்ள பல நூறு கல்வெட்டுகளில் 119 கல்வெட்டுகள்தான் இதுவரை ஆராயப்பட்டுள்ளன. மொத்த கல்வெட்டுகளையும் ஆய்வு செய்தால் ஆச்சரிய மூட்டும் மேலும் ஏராளமான தகவல்கள், ரகசியங்கள் வெளிவர வாய்ப்புள்ளது.

பல்லவர் காலத்து சாசனங்கள் எதுவும் கிடைக்கவில்லை. அவையும் கிடைத்து இருந்தால் அண்ணா மலையார் ஆலயத்தின் பழமை சிறப்புகள், நமக்கு மேலும் அதிக அளவில் துல்லியமாக கிடைத்திருக்கும். சங்கநாட்டு மன்னன், காலச்சூரி மன்னன் ஆகியோரும் திருவண்ணாமலையார் அருளை கேள்விப்பட்டு நிறைய பொன்னும், பொருட்களையும் தானமாக கொடுத்துள்ளனர்.

இதுவரை ஆராயப்பட்ட 119 கல்வெட்டுகளில் இருந்து திருவண்ணாமலை ஆலயம் முதலில் எப்படி தோன்றியது, எப்படி வளர்ச்சி பெற்றது, யார்யாரெல்லாம் கோவிலை கட்டினார்கள் என்ற உண்மை ஆதாரப்பூர்வமாக நமக்கு கிடைத்துள்ளது.

திருவண்ணாமலை ஆலயம் இப்போது 24 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாக உள்ளது. ஆனால் கல்வெட்டு ஆய்வுப்படி பார்த்தால், இதிகாச காலத்தில் மகிழம் மரத்தடியில் ஈசன் சுயம்புலிங்கமாக தோன்றினார் என்று தெரிய வருகிறது. அதனால்தான் திருவண்ணாமலை தலத்தில் மகிழ மரம் தல விருட்சமாக உள்ளது.

அடி, முடி காண முடியாதபடி, ஆக்ரோஷமாக, தீப்பிழம்பாக நின்ற ஈசன் மனம் குளிர்ந்து மலையாக மாறியபோது அவரிடம் விஷ்ணுவும், பிரம்மாவும், "இவ்வளவு பெரிய மலையாக இருந்தால் எப்படி மாலை போட முடியும்? எப்படி அபிஷேகம் செய்ய முடியும்?" என்று கேட்டனர். இதைத் தொடர்ந்தே ஈசன், மலையடி வாரத்தில் சுயம்பு லிங்கமாகத் தோன்றியதாகத் தல புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் மகிழ மரத்தடியில் சுயம்பு லிங்கம் சிறு மண்சுவர் கோவிலாக இருந்தது. 4ம் நூற்றாண்டில் கருவறை, செங்கல்லால் கட்டப்பட்டது. 5ம் நூற்றாண்டில் அது சிறு ஆலயமாக மேம்பட்டது.

6, 7, 8ம் நூற்றாண்டுகளில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வராலும் அண்ணாமலையார் பாடப் பெற்றார். அப்படி பாடப் பெற்றபோது கூட அண்ணாமலையார் செங்கல் கருவறையில்தான் இருந்தார். ஆலயமும் ஒரே ஒரு அறையுடன் இருந்தது.

9ம் நூற்றாண்டில் சோழப் பேரரசு செல்வாக்கு பெற்ற போது, திருவண்ணாமலை ஆலயம் மாற்றம் பெறத் தொடங்கியது. 817ம் ஆண்டு முதலாம் ஆதித்ய சோழ மன்னன் செங்கல் கருவறையை அகற்றி விட்டு கருங்கல்லால் ஆன கருவறையைக் கட்டினார். பிறகு ஒரு காலக் கட்டத்தில் அந்த கருவறை மகிழ மரத்தடியில் இருந்து தற்போதைய இடத்துக்கு மாறியது. 10ம் நூற்றாண்டில் கருவறையைச் சுற்றி முதல் மற்றும் இரண்டாம் பிரகாரங்கள் கட்டப்பட்டன. சோழ மன்னர்களின் வாரிசுகள்தான் இந்த பிரகாரங்களைக் கட்டினார்கள்.

அப்போதே திருவண்ணாமலை ஆலயம் விரிவடையத் தொடங்கி இருந்தது. 11ம் நூற்றாண்டில் கோபுரங்கள் எழத் தொடங்கின. முதலாம் ராஜேந்திரச் சோழன் கொடி மர ரிஷி கோபுரத்தையும் சுற்றுச் சுவர்களையும் கட்டினான்.

1063ம் ஆண்டு வீரராஜேந்திர சோழ மன்னனால் கிளிக்கோபுரம் கட்டப்பட்டது. இதனால் திருவண்ணாமலை ஆலயம் கம்பீரம் பெறத் தொடங்கியது.

12ம் நூற்றாண்டில் மூன்றாம் குலோத்துங்கச் சோழ மன்னர் உண்ணாமலை அம்மனுக்கு தனி சன்னதி கட்டினார். 13ம் நூற்றாண்டில் சிறு, சிறு சன்னதிகள் உருவானது. சோழ மன்னரிடம் குறுநில மன்னராக இருந்த பல்லவராஜா, கோப்பெருஞ் சிங்கன் ஆகியோர் இந்த சன்னதிகளைக் கட்டினார்கள். அதோடு ஏராளமான நகைகளையும் திருவண்ணாமலை கோவிலுக்கு அவர் கள் வாரி, வாரி வழங்கினார்கள்.

14ம் நூற்றாண்டு திருவண்ணாமலை ஆலயத்துக்கு மிக முக்கியமான காலக்கட்டமாகும். அந்த நூற்றாண்டில்தான் வடக்கு, தெற்கு, மேற்கு பகுதிகளில் கோபுரங்கள் கட்டப்பட்டன. 1340ம் ஆண்டு முதல் 1374ம் ஆண்டுக்குள் இந்த மூன்று கோபுரங்களும் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஹொய்சாள மன்னர் வீர வல்லாளன் இந்த திருப்பணிகளைச் செய்தார்.

15ம் நூற்றாண்டில் திருவண்ணாமலை ஆலயத்துக்கு நிறைய பேர் தானமாக நிலங்களை எழுதி வைத்தார்கள். திருவண்ணா மலை ஆலயம் பொருளாதாரத்தில் மேம்பாடு பெற்றது இந்த நூற்றாண்டில்தான்.

16ம் நூற்றாண்டில் விஜய நகர பேரரசர் கிருஷ்ண தேவராயருக்கு, திருவண்ணாமலை கோவில் மிக, மிக பிடித்து போய் விட்டது.





திருவண்ணாமலை ஆலயத்தை மிகப்பெரிய ஆலயமாக மாற்றி அமைத்த பெருமைக்கு சொந்தக்காரர் அவர்தான்.

அவர் மற்ற மன்னர்கள் போல ஏதோ ஒன்றிரண்டு திருப்பணிகள் மட் டும் செய்யவில் லை. இருபது பெரிய திருப் பணிகளை செய்தார். அந்த திருப்பணிகள் ஒவ்வொன்றும் இன்றும் திருவண்ணாமலையில் கிருஷ்ண தேவராயரை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

217 அடி உயரத்தில் கம்பீரமாக ஓங்கி உயர்ந்து நிற்கும் கிழக்கு ராஜகோபுரம், சிவ கங்கை தீர்த்தக்குளம், ஆயிரம் கால் மண்டபம், இந்திர விமானம், விநாயகர் தேர் திருமலைத்தேவி அம்மன் சமுத்திரம் என்ற நீர்நிலை, ஏழாம் திருநாள் மண்டபம், சன்னதியில் உள்ள 2 கதவுகள், வாயில் கால்களுக்கு தங்க முலாம் பூசியது, உண்ணாமுலை அம்மன் ஆலய வாயில் கால்கள், கதவுக்கு தங்க முலாம் பூசியது, உண்ணாமுலை அம்மன் சன்னதிக்கு முன் ஆராஅமுதக்கிணறு வெட்டியது, அண்ணா மலையார்க்கும் உண்ணாமுலை அம்மனுக்கும் ‘கிருஷ்ணராயன்’ என்ற பெயரில் பதக்கம் செய்து கொடுத்தது, நாகாபரணம், பொற்சிலை, வெள்ளிக்குடங்கள் ஆகியவை கிருஷ்ண தேவராயரின் முக்கிய திருப்பணிகளில் சில.

1529ல் கிருஷ்ண தேவராயரின் ஆட்சி நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, தஞ்சை மன்னர் செவ்வப்ப நாயக்கர், கிழக்கு ராஜகோபுரத்தை 1590ல் கட்டி முடித்தார்.

இதற்கிடையே குறுநில மன்னர்களும், சிவனடியார்களும் சிறு, சிறு கோபுரங்களைக் கட்டினார்கள். பே கோபுரம், அம்மணியம்மாள் கோபுரம், திருமஞ்சன கோபுரம், வல்லாள மகாராஜ கோபுரம் ஆகியவை அதில் குறிப்பிடத்தக்கவை. இன்று 9 கோபுரங்களுடன் திருவண்ணாமலை ஆலயம் அழகுற காட்சியளிக்கிறது.

கோபுரங்கள் அனைத்தும் 1370ல் கட்டத் தொடங்கப்பட்டு 1590ம் ஆண்டில் முடிக்கப் பட்டுள்ளது. கோபுரங்கள் கட்டி முடிக்கவே சுமார் 220 ஆண்டுகள் தேவைப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில்தான் ஆலயத்தின் மொத்த கட்டமைப்பும் கட்டிமுடிக்க சுமார் 1000 ஆண் டுகள் ஆகி இருப்பது கல்வெட்டுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னர்கள் மட்டுமல்ல... மகாராணிகள், இளவரசர்கள், இளவரசிகள், சிற்றரசர்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், அரசு பிரதிநிதிகள், சித்தர்களும் இந்த ஆலயத்தின் திருப்பணிகளில் முக்கியப் பங்கு வகித்துள்ளனர். சோழ, பாண்டிய, பல்லவ, ஹொய்சாள, சம்புவராய, விஜயநகர, தஞ்சை மன்னர்கள் போட்டி போட்டு செய்த திருப்பணிகள்தான் திருவண்ணாமலை தலத்தை நோக்கி மக்கள் அலை, அலையாக வர உதவி செய்தது.

14ம் நூற்றாண்டில் இருந்து 17ம் நூற் றாண்டு வரை திருவண்ணாமலை நகரம் பல் வேறு போர்களை சந்தித்தது. என்றாலும் அண்ணாமலையார் அருளால் இடையிடையே திருப்பணிகளும் நடந்தது.

கடந்த சுமார் 150 ஆண்டுகளாக நகரத்தார் செய்து வரும் பல்வேறு திருப்பணிகள் மகத் தானது. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நாட்டுக்கோட்டை நகரத்தார் திருவண்ணா மலையில் குடியேறினார்கள்.

மன்னராட்சி முடிவுக்கு வந்த பிறகு திருவண்ணாமலை ஆலயத்தில் மாபெரும் திருப்பணிகள் செய்த பெருமையும், சிறப்பும் நாட்டுக்கோட்டை நகரத்தார்க்கு உண்டு. 1179ம் ஆண்டு கட்டப்பட்ட உண்ணாமுலை அம்மன் ஆலயத்தை முழுமையாக அகற்றி விட்டு புதிய சன்னதியை நாட்டுக்கோட்டை நகரத்தார்தான் கட்டி கொடுத்தனர். அது மட்டுமின்றி இத் திருக்கோவிலை முழுமையாக திருப்பணி செய்து 12.06.1903, 04.06.1944, 04.04.1976 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடத்தி வைத்த புண்ணியமும் நாட்டுக்கோட்டை நகரத் தார்களுக்கே சாரும்.

மன்னர்களில் கிருஷ்ண தேவராயரும், பல்லவ மன்னன் கோப்பெருஞ் சிங்கனும் செய்த திருப்பணிகள் அளவிட முடியாதது. இன்று நாம் திருவண்ணாமலை ஆலயத்தை வியந்து, வியந்து பார்க்கிறோம் என்றால் அதற்கு இந்த இரு மன்னர்களிடம் இருந்த அண்ணாமலையார் மீதான பக்தியே காரணமாகும். எத்தனையோ மன்னர்கள் திருப்பணி செய்துள்ள போதிலும் வல்லாள மகாராஜா மீது அண்ணாமலையாருக்கு தனிப்பட்ட முறையில் பாசம் அதிகம் இருந்தது. அதற்கு காரணம் வல்லாள மகாராஜா வாரிசு எதுவும் இல்லாமல் தவித்ததுதான்.

திருவண்ணாமலையை ஆட்சி செய்த அந்த மன்னன் மீது இரக்கப்பட்ட அண்ணாமலையார், அவரை தன் தந்தையாக ஏற்றுக் கொண்டார். அந்த மன்னனின் மகனாக மாறி அற்புதம் செய்தார்.

அது மட்டுமின்றி வல்லாள மகாராஜா மரணம் அடைந்தபோது, அவருக்கு இறுதிச்சடங்குகள் அண்ணாமலையார் சார்பில் செய்யப்பட்டன. மேலும் ஆண்டு தோறும் வல்லாள மகாராஜாவுக்கு மாசி மாதம் அண்ணாமலையார் திதி கொடுத்து வருகிறார். ஒரு மகன், தன் தந்தைக்கு செய்ய வேண்டிய கடமைகளை அண்ணாமலையார் செய்து வருகிறார்.

ஆன்மிகமலர் டிரஸ்ட்
Tamilnadu Government Redg.304/2016
எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.
AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)
நெ.16/18, பாரதீஸ்வரா் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
8825844033



# ஜூன் மாதப் பலன்கள்

**மேஷம்:** எந்த ஒரு வேலையையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்து வெற்றிபெறும் மேஷ ராசியினரே இந்த மாதம் ராசிநாதன் செவ்வாய் உச்ச நிலையில் சஞ்சாரத்தால் மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். வயிறு சம்பந்தப்பட்ட நோய் வரலாம். உணவு கட்டுப்பாட்டில் கவனம் தேவை.

தொழில் ஸ்தானாதிபதி செவ்வாயும் கேதுவும் இருக்கிறார்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களை மாதத்தின் மத்திய பகுதியில் செய்வது நல்ல பலன் தரும். வாடிக்கையாளர்கள் பற்றிய வீண் கவலை ஏற்பட்டு நீங்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு பணவரத்து திருப்தி தரும். ஆனால் எதிர்பார்த்த அளவு இருப்பது கடினம். பணி நிமித்தமாக வெளியூர் செல்ல வேண்டி வரலாம்.

குடும்பத்தில் வீண் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். ராசியில் இருக்கும் புத்திகாரகன் புதனால் எல்லா வற்றையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

பெண்களுக்கு முயற்சிகள் சாதகமான பலன்தரும். பணவரத்து இருக்கும். உடல் ஆரோக்யத்தில் கவனம் தேவை.

**ரிஷபம்:** எந்த ஒரு காரியத்தையும் நிதானமாக செய்து முடிக்கும் ரிஷபராசியினரே உங்களது கருத்துக்கு மற்றவர்களிடம் வரவேற்பு இருக்கும். மாத தொடக்கத்தில் பணவரத்து இருக்கும். சுக்கிரன் சஞ்சாரத்தால் எதிர்ப்புகள் விலகும். தடைபட்ட காரியங்களை மீண்டும் செய்து முடிக்க தேவையான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். மனதில் புதிய உற்சாகமும், தைரியமும் உண்டாகும். சுகாதிபதி சூரியன் ராசியில் சஞ்சரிப்பதால் வசதிகளுக்குக் குறைவிருக்காது.

பாக்கிய ஸ்தானத்தை உச்ச நிலையில் இருக்கும் செவ்வாய் இருக்கிறார். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். புதிய ஆர்டர்கள் பெறுவதில் சிந்தனை செலுத்துவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை செய்யும் இடத்தில் இருந்த பிரச்சனைகள் குறை யும். அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம்.

பெண்களுக்கு தடைபட்ட காரியங்களை செய்து முடிக்க மீண்டும் முயற்சிகள் மேற்கொள்வீர்கள். உற்சாகம் உண்டாகும்.

**மிதுனம்:** திட்டமிடுவதில் கெட்டிக்காரர்களான மிதுன ராசியினரே நீங்கள் எதிலும் சிக்காமல் நழுவுவதில் கெட்டிக்காரர். இந்த மாதம் ராசிநாதன் புதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். லாபஸ் தானாதிபதி செவ்வாய் 2ம் வீட்டை பார்ப்பதால் கொடுத்த வாக்கை காப்பாற்றி அதன் மூலம் மதிப்பும், மரியாதையும் கிடைக்க பெறுவீர்கள். பணவரவு திருப்தி தரும். சிக்கலான சில விஷயங்களை சாதூரியமாக பேசி முடித்து விடுவீர்கள். வீண் பயத்தை தவிர்ப்பது நல்லது.

தொழில் ஸ்தானாதிபதி குரு பாக்கியஸ் தானத்தைப் பார்ப்பதால் தொழில் வியாபாரம் முன்பு இருந்ததை விட முன்னேற்றம் காண்பீர்கள். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடும். உத்தியோகஸ்தர்கள் தங்களது சாமர்த் தியமான பேச்சால் எல்லாவற்றையும் திறம்பட செய்து முடித்து பாராட்டு கிடைக்க பெறுவார்கள்.

பெண்களுக்கு சாதூரியமான பேச்சின் மூலம் சிக்கலான பிரச்சனைகளையும் தீர்த்து விடுவீர்கள். பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**கடகம்:** ஒரு காரியத்தை செய்யும் முன்பு அது சரியா தவறா என்று பல முறை மனதுக்குள் கேள்வி எழுப்பி பின்னர் ஒரு முடிவு எடுக்கும் கடகராசியினரே இந்த மாதம் கிரகங்களின் சஞ்சாரத்தால் எல்லா வகையிலும் நல்ல பலன் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். வழக்குகள் சார்ந்த எதிலும் சற்று கூடுதல் கவனமாக இருப்பது நல்லது. வீண் பிரச்சனைகளில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது. வீடு மனை ஆகியவற்றில் முதலீடு செய்யும் போது கவனம் தேவை.

தொழில் ஸ்தானத்தில் புதன் இருக்கிறார். தொழில் வியாபாரம் தொடர்பான மனக்கவலை தோன்றி மறையும். ஆனால் லாபம் கிடைக்க பெறுவீர்கள். புதிய ஆர்டர்கள் வாங்குவது தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். உத்தியோகத் தில் இருப்பவர்களுக்கு எதிலும் நிதான மாக செயல்படுவதும் மற்ற வர்களை அனுசரித்து போவதும் நல்லது.

பெண்களுக்கு எந்த காரியத்தையும் கூடுதல் கவனத்துடன் செய்வது நல்லது. அடுத்தவர் களுக்கு உதவி செய்யும்போது கவனம் தேவை.

**சிம்மம்:** அதிகார தோரணையுடன் காணப் படும் சிம்மராசியினரே நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்பட மாட்டீர்கள். உங்கள் வழி தனி வழி என்று செயல்படுவீர்கள். இந்த மாதம் ராசிநாதன் சூரியன் சஞ்சாரத்தால் மனதில் தன்னம் பிக்கையை அதிகரிக்கும். புத்தி தெளிவு உண் டாகும். நல்லது எது கெட்டது எது என்று பிரித்து பார்த்து செயல்படுவீர்கள். எதிர்பாராத சில திருப்பங்களால் காரிய வெற்றி கிடைக்கும். வழக்கு விவகாரங்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

தொழில் ஸ்தானத்தில் ராசிநாதன் இருப்பதன் மூலம் தொழில் வியாபாரம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் காண வாய்ப்புகள் வந்து சேரும். நிதானமாக பேசுவதன் மூலம் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கலாம். சிலர் கட்டளையிடுகின்ற பதவி கிடைக்க பெறுவார்கள். எதிர்பார்த்த பண உயர்வு கிடைக்கப் பெறுவீர்கள்.

பெண்களுக்கு தன்னம்பிக்கையுடன் செயல் பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள். உடல் ஆரோக் கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** புத்தி கூர்மையுடன் செயல்பட்டு எந்த சிக்கலையும் தீர்க்கும் கன்னிராசியினரே இந்த மாதம் எந்த ஒரு விஷயத்தையும் கவனமுடன் கையாள்வது நல்லது. ராசிநாதன் புதன் அஷ்டமஸ்தானத்தில் மறைந்திருந்தாலும் அவரின் பாதசார சஞ்சாரம் மூலம் எல்லா காரியங்களிலும் அனுகூலத்தை தருவார். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக் கும். மனதில் தன்னம்பிக்கை ஏற்படும். எந்த ஒரு காரியத்தையும் துணிச்சலாக செய்து வெற்றி பெறுவீர்கள். அரசாங்க ரீதியிலான விஷயங்கள் நன்மை தரும்.ஜூன் 5ம் தேதிக்கு மேல் புதன் பாக்கிய ஸ்தானத்தி சஞ்சரிப்பது எல்லா வகையிலும் நன்மையை தரும்.

தொழில் ஸ்தானத்தை சனி பார்க்கிறார்.



மு.கிருஷ்ணமோகன்
ஸ்ரீ காலபைரவி
ஜோதிட நிலையம்
தொ.பே.எண்:
08526223399 / 09843096462

**வாசகர்களுக்கு வேண்டுகோள்...**

ஜோதிடர் கிருஷனமோகன் எழுதிய மாதப் பலன்களில் விரிவான பலன்களை படிக்க ஆன்மிகமலர்.காம் இணையதளத்தில் பலன்கள் பகுதியில் படித்து பயன்பெறலாம்

தொழில் வியாபாரம் விறுவிறுப்படையும். கடந்த காலங்களில் இருந்த மந்த நிலை மாறும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளின் சொல்படி நடந்து கொள்வது நல்லது. பணவரத்து திருப்திகரமாக இருக்கும்.

பெண்களுக்கு எந்த ஒரு காரியத்தையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். தேவையான உதவிகள் கிடைக்கும்.

**துலாம்:** அடுத்தவரை அனுசரித்து செல்வதில் கெட்டிக்காரர்களான துலா ராசியினரே! இந்த மாதம் ராசிநாதன் சுக்கிரன் பாக்கியஸ்தானத்தில் இருப்பதால் எதிர்பார்த்த காரியங்கள் சாதகமாக நடக்கும். பணம் சார்ந்த விஷயங்களில் எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லது. எதிர்பாராத சில சம்பவங்கள் நடக்கலாம். அதனால் உங்களுக்கு நன்மையும் உண்டாகலாம். ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும்.

தனாதிபதி செவ்வாய் சஞ்சாரத்தால் பணவரத்து கூடும். எதிர்ப்புகள் மறையும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் குறையும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். வாக்கு வன்மையால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும். வேளை தவறி உண்ண வேண்டி இருக்கும். வாகனம், வீடு ஆகியவற்றால் செலவு ஏற்படும். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக நடக்காவிட்டாலும் லாபம் குறையாமல் இருக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது தாமதப்படும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தடங்கல்கள், கூடுதல் உழைப்பு ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும். பணி நிமித்தமாக பயணம் செல்ல வேண்டி வரலாம்.

பெண்களுக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். மற்றவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை சோர்வடையாமல் தொடர்ந்து செய்து முடிக்கும் ஆற்றலுடைய விருச்சிக ராசியினரே இந்த காலகட்டத்தில் பணவரத்து அதிகரிக்கும். ராசிநாதன் செவ்வாய் சஞ்சாரம் எடுத்த காரியங்கள் எல்லாம் கைகூடச் செய்யும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். எதிர்ப்புகள் விலகும். பயணம் மூலம் லாபம் கிடைக்க கூடும். புதிய நபர்கள் நட்பு கிடைக்கும்.

தனாதிபதி குரு மறைமுக தனஸ்தானத்தை பார்க்கிறார். பணவரத்து அதிகரிக்கும். மற்றவர்கள் செய்ய தயங்கும் வேலையை செய்து முடித்து பாராட்டு கிடைக்க பெறுவீர்கள். எண்ணியபடி செயல்களை செய்து காரிய வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். ஆன்மிக பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். சூரியன் சஞ்சாரம் ராசியைப் பார்ப்பதால் விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ் ர்கள். திருமண முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

பெண்களுக்கு எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். பணவரத்து திருப்தி தரும்.

**தனுசு:** அமைதியுடனும் சாந்தமாக பேசும் குணமும் உடைய தனுசு ராசியினரே இந்த மாதம் எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. பணவரவு வரும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். மனம் விரும்பியது போல செயல்படுவீர்கள். உங்களது பொருட்களை கவனமாக பார்த்துக்கொள்வது நல்லது. உடல் ஆரோக்கியம் மேலோங்கும். வாகனங்கள் மூலம் செலவு உண்டாகலாம். சுக்கிரன் சஞ்சாரத்தால் எதிர்பார்த்த பண வரவு இருக்கும். வீட்டிற்கு தேவையான வசதிகள் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு மனை வாங்குவதற்கான தடைகள் அகலும்.

ராசிநாதன் லாபஸ்தானத்தில் இருக்க தொழில் வியாபாரம் சூப்பர இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம். புதிய வாடிக்கையாளர்கள் தொடர்பு உண்டாகும். பழைய சிக்கல்கள் தீர்வதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது. திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும்.

குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வருகையால் விரும்பத்தகாத வாக்குவாதங்கள் ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வது நல்லது. குழந்தைகள் பற்றிய கவலை உண்டாகும். அவர்களுக்காக பாடுபடுவீர்கள்.

பெண்களுக்கு திட்டமிட்டு செய்தாலும் காரியங்களில் தடை ஏற்படும். எதிர்பாராத செலவு உண்டாகும்.

**மகரம்:** நியாயம், நேர்மை, இதுதான் வாழ்க்கை என்று எண்ணும் மகர ராசியினரே இந்த மாதம் கிரகங்களின் சஞ்சாரத்தால் எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். பணவரத்து கூடும். எதிர்ப்புகள் விலகும். நீண்ட நாட்களாக தடைபட்டு வந்த காரியத்தை மீண்டும் செய்து முடிக்க முயற்சிகள் மேற்கொள்வீர்கள். வெளியூர் தகவல்கள் சாதகமானதாக இருக்கும்.

சிலர் வீட்டை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடலாம். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம் எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது. சுக்கிரன் சஞ்சாரத்தால் வெளிநாட்டு பயண வாய்ப்புகள் வரலாம். சிலர் வெளியூர் பயணம் செல்வார்கள். எதிர்பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை.

தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். பார்ட்னர்களுடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலைதூக்கலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை இருக்கக்கூடும். தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து சேரும்.

பெண்களுக்கு எதிலும் தேவையற்ற வீண் கவலை உண்டாகும். பயணங்கள் செல்ல நேரிடலாம். கடன் விஷயங்களில் கவனம் தேவை.

**கும்பம்:** உழைப்பதற்கு அஞ்சாத கும்பராசியினரே! நீங்கள் எதிலும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போன்று செயல்படுவீர்கள். இந்த மாதம் ராசிநாதன் லாபவீட்டீல் இருப்பதால் சகோதரர்கள் வகையில் ஏதாவது மனத்தாங்கல் ஏற்பட்டு மறையும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பூமி தொடர்பான பிரச்சனைகள் இழுபறியான நிலை காணப்படும். சுகாதிபதி சுக்கிரன் சஞ்சாரம் மனதெம்பும் மகிழ்ச்சியும் தரும். அடுத்தவர்களுக்காக எந்த உத்தரவாதமும் கொடுக்காமல் இருப்பது நல்லது. சுக்கிரன் சஞ்சாரம் ராசிக்கு 5ல் இருப்பதால் வீண் மனக்கவலை நீங்கும். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். நண்பர்கள் மூலம் கிடைக்க வேண்டிய உதவிகள் தாமதப்படும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்குவர தாமதம் ஆகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலை பளுவையும் சந்திக்க நேரிடும். சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம்.

பெண்கள் அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்யும்போது கவனமாக இருப்பது நல்லது. செலவு அதிகரிக்கும். வீண் கவலை உண்டாகலாம்.

**மீனம்:** எந்த ஒரு காரியத்தையும் முன்னின்று செய்ய ஆசைப்படும் மீன ராசியினரே நீங்கள் நிதானமாக முடிவெடுத்தாலும் எடுத்த முடிவில் மாறாதவர். இந்த மாதம் எல்லா வகையிலும் நிம்மதியும் மகிழ்ச்சியும் உண்டாகும். எல்லா முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் உதவிகள் கிடைக்கும். பணவரத்து அதிகரிக்கும். வீடு கட்டும் பணியில் ஈடுபட்டு இருப்பவர்கள் தொடர்ந்து அதனை செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலனை தரும்.

கையிருப்பு கூடும். இதுவரை இருந்த தொல்லை கள் நீங்கும். நீண்ட தூரப் பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் தைரியம் பிறக்கும். சுக்கிரன் சஞ்சாரம் வாக்கு வன்மையால் ஆதாயத்தை பெற்று தரும். உயர்மட்ட பதவியில் உள்ளவர்களின் உதவி கிடைக்கும்.

தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடக்கும் எதிர்பார்த்த லாபம் இருந்தாலும் தொழில் தொடர்பான செலவும் கூடும். சரக்குகளை வாங்கும்போது கவனித்து வாங்குவதும் பாதுகாப்பாக வைப்பதும் நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். பதவி உயர்வு கிடைக்கலாம்.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது. சகோதரர் வகையில் உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். பெண்களுக்குஆடை, ஆபரணங்கள் வாங் கும் எண்ணம் அதிகரிக்கும். நிதானமாக பேசி மற்றவர்களிடம் அனுசரித்து செல்வது காரிய வெற்றிக்கு உதவும்.

முழு பலன்களை படிக்க
ஆன்மிகமலர்.காம்
இணையதளத்தை பாருங்கள்.

# அச்சத்தை விலக்குவதற்கான உத்திகள்

35
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

பூஜ்யகுருதேவர் அருளுகிறார்: " எதைப்பற்றி நீங்கள் பயங்கொண்டாலும், உங்கள் மனதை அதிலிருந்து அகற்றி அதை இறைவனிடம் விட்டுவிடுங்கள். அவனிடத்தில் நம்பிக்கையுடன் இருங்கள். மிகுதியான துன்பம் வெறும் கவலையினால் மட்டுமே ஏற்படுகிறது. வியாதி இன்னும் வராமலிருக்கின்றது; இப்பொழுதே நாம் ஏன் துக்கப்படவேண்டும்? நமக்கு ஏற்படும் நோய்களில் அதிகமானவை அச்சத்தினால் ஏற்படுகின்றன. ஆகையால் நீங்கள் அச்சத்தை கைவிட்டால், அக்கணமே விடுதலை பெறுவீர்கள். குணமாதல் உடனடியாக நிகழும். ஒவ்வொரு இரவும் உறங்கப்போவதற்கு முன்பு உறுதிப்படுத்திக் கூறுங்கள். "தெய்வத் தந்தை என்னுடன் உள்ளார்; நான் பாதுகாக்கப்படுகின்றேன்." உங்களை பரமாத்மாவினாலும் அவனுடைய பிரபஞ்ச சக்தியாலும் மானசீகமாகச் சூழவைத்து, "என்னைத் தாக்கும் எந்தக் கிருமியும் மின்சக்தியால் பொசுக்கிவிடப்படும்." என எண்ணிக் கொள்ளுங்கள். மூன்று முறை 'ஓம்' அல்லது 'இறைவா' என்ற வார்த்தையை உச்சரியுங்கள். இது உங்களுக்கு கவசமாக இருக்கும். இறைவனின் அற்புதமான பாதுகாப்பை நீங்கள் உணர்வீர்கள். அச்சமற்று இருங்கள். ஆரோக்கியத்துடன் இருப்பதற்கு ஒரே வழி இதுதான். இறைவனுடன் நீங்கள் ஆழ்ந்த தொடர்புகொண்டால், அவரது உண்மை உங்களுக்குள் பாயும். நீங்கள் அழிவற்ற ஆன்மா என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

நீங்கள் பயத்தை உணரும்பொழுதெல்லாம் உங்கள் கையை இதயத்தின் மேல் தோலுக்கருகில் வைத்து இடமிருந்து வலமாகத் தேய்த்துவிட்டுக் கூறுங்கள்; "எந்தையே, நான் சுதந்திரமானவன். எனது இதய வானொலியிலிருந்து இந்தப் பயத்தை அகற்றி அருளுக." நீங்கள் சாதாரமான ஒரு வானொலிப் பெட்டி யில் ஏற்படும் இறைச்சலை நீக்குவது போன்று, உங்கள் இதயத்தை இடமிருந்து வலமாக தொடர்ந்து தேய்த்து, உங்கள் அச்சத்தை உங்கள் இதயத்திலிருந்து விலக்க விரும்புகிறீர்கள் என்ற எண்ணத்தின்மீது தொடர்ந்து மனதை ஒருமுகப்படுத்தினால், அது போய்விடும்; அத்துடன் இறைவனின் பேரானந்தமும் உணரப்படும்."



## இறைவனின் தொடர்பால் அச்சம் முடிவுறும்

குருதேவர் மேலும் கூறுகிறார்: "அச்சம் உங்களை ஓயாமல் வாட்டிக்கொண்டே இருக்கிறது. இறைவனுடைய தொடர்பினால் அச்சம் முடிவுறுகிறது. வேறொன்றுமில்லை. ஏன் தாமதிக்க வேண்டும்? யோகத்தின் மூலம் அவனுடன் ஆழ்ந்த தொடர்பை நீங்கள் ஏற்படுத்த முடியும். வேறெந்த தேசமும் என்றுமே கொடுக்காததொன்றை இந்தியா உங்களுக்குக் கொடுப்பதற்காக வைத்திருக்கின்றது. எனது குருதேவர் ஸ்வாமி யுக்தேஸ்வருக்கு அனைத்திற்காகவும் கடமைப்பட்டுள்ளேன்; அவர் எல்லா வழிகளிலும் தலைசிறந்தவராக விளங்கினார். அவருடைய விவேகத்தைப் பின்பற்றியதன் மூலம், மேலை நாட்டில் எனது பணியைச் செய்வதில் வெற்றி காணமுடிந்தது. என் குருதேவர் கூறினார்; "நீ எதைச் செய்தாலும். இதற்கு முன்பாக வேறெவரும் அதைச் செய்திராத அளவிற்குச் செய்ய முயற்சி செய்." இந்த எண்ணத்தை நீங்கள் நினைவில் கொள்வீர்களானால், நீங்கள் வெற்றியடைவீர்கள். பெரும்பாலானோர் மற்றவர்களைப் போலவே செய்கின்றனர். நீங்கள் சுயமாக இருக்கவேண்டும். நீங்கள் எதைச் செய்தாலும், அதை நன்றாகச் செய்யுங்கள். நீங்கள் இறைவனுடன் இசைந்துள்ளபோது இயற்கை முழுவதும் உணர்வுபூர்வமாக உங்களுடன் ஆழ்ந்த தொடர்புகொள்கிறது.

நாம் பெரும்பாலும் நம்மைப்பற்றியே முதலில் சிந்திக்கின்றோம்; ஆனால் நாம் எப்பொழுதும் மற்றவர்களையும் நம்முடைய மகிழ்ச்சியில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இதை நாம் நம்து இதயங்களின் நற்குணத்தினால் செய்யும்பொழுது ஒரு பரஸ்பர பரிவு உணர்வை வெளியில் பரப்புகின்றோம். ஆயிரம் மனிதர்களைக்கொண்ட ஒரு சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் இவ்வழியில் நடந்துகொண்டால் ஒவ்வொருவரும் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது நண்பர்களைப் பெற்றிருப்பர். ஆனால் அச்சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவர்க்கு ஓர் எதிரியைப்போல் நடந்து கொண்டால், ஒவ்வொருவரும் தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பது பகைவர்களைக் கொண்டிருப்பர்.

மற்றவர்களின் இதயங்களை அன்பின் சக்தியினால் வெல்வதே உங்கள் வாழ்வில் பெறக்கூடிய மகத்தான வெற்றி. எப்பொழுதும் மற்றவர்களுக்கு முதலிடம் கொடுக்க முயல்வீர்களானால், முழு உலகமுமே உங்கள் காலடியில் எனக் காண்பீர்கள்.

மன அமைதியின்மையினால் துன்புறுவர், தன்னுடைய நிலையை புரிந்துகொண்டு வாழ்க்கையுடன் தனது இசைவின்மைக்கு காரணமான தொடர்ச்சியான தவறுகளைப்பற்றி சிந்தனை செய்யவேண்டும். மன அமைதியற்ற மனிதர், அவரது நோய்க்கான காரணம் ஒரு புதிர் அல்ல, ஆனால் அது அவரது சொந்த பழக்கங்களினுடைய ஒரு நியாயமான வெளிப்பாடே என்பதை அவர் ஒப்புக்கொள்ளும்மாத்திரத்திலேயே, அவர் ஏற்கனவே பாதி குணப்படுத்தப்பட்டவராகிறார்."

## நரம்பு மண்டலம்

குருதேவர் மேலும் அருளுகிறார்: "நரம்பு மண்டலமானது, மனிதனுக்கு அவனது புற மற்றும் அகத்தூண்டுதலுக்கு அவன் எதிர்ச்செயல் புரிவதற்கு ஏற்ப தொலைபேசி போன்று உடலின் வெளிவாயில் மற்றும் உள்வாயில் போன்று அமைந்துள்ளது. நரம்பு மண்டலம், மூளை, இதயம் மற்றும் உடலின் இதரப்பகுதிகளுக்கு உயிரோட்டத்தை அனுப்புகிறது. இது பார்த்தல், கேட்டல், தொடுதல், சுவைத்தல் மற்றும் நுகர்தல் ஆகிய ஐம்புலன்களுக்கு சக்தியை பங்கிட்டு அளிக்கிறது. நரம்புகள்தான் புற உலகுடன் நமது தொடர்பிற்கான ஊடகமும் எல்லா புலன் எதிர் செயல்களுக்கான மூலமும் ஆகும்.

உணர்ச்சிவசப்பட்ட நிலை, சில பகுதிகளுக்கு மிக அதிக சக்தியை அளித்து, மற்ற பகுதிகளுக்கு அவற்றிற்கு வழக்கமான பங்கை கிடைக்கச் செய்யாமல், நரம்புச் சமநிலையை நிலைகுலையச் செய்கிறது. நரம்புச்சக்தியின் இந்தச் சரியான பங்கீடு இல்லாத குறைபாடுதான் மன அமைதியின்மைக்கான ஒரே காரணம்.

எந்த மனிதன் தன்னுடைய அகந்தையின்மீது அதீத பற்று வைக்காமல் இருப்பதாலும், மேலும் தானன்றி இறைவன்தான் இந்தப் பிரபஞ்சத்தை நடத்துபவன் என்று அறிந்திருப்பதாலும் உணர்ச்சிவசப்படுதலைத் தவிர்க்கிறானோ அந்த அமைதியான மனிதன், வாழ்க்கையில் எந்த சூழ்நிலையையும் எப்பொழுதும் எதிர்கொள்ளமுடிகிறது. ஏனெனில் அவனது நரம்புசக்தி சமநிலை

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்



செய்யப்பட்டுள்ளது. பகவான் கிருஷ்ணன் கூறியுள்ளான்: “பரம்பொருளை அறிந்தவன், பரப் பிரம்மத்தில் நிலை பெற்றிருப்பவன்,நெறிதவறாத அறிவுடன் மாயையிலிருந்து விடுபட்டு, இன்ப மான அனுபவங்களினால்மகிழ்ச்சி அடைவது மில்லை; துன்பமான அனுபவங்களினால் மனந்தளர்வது மில்லை.” இந்த இலட்சியத்தைத்தான் நாம் முயற்சி செய்து அடையவேண்டும்.

யோகியர் நரம்புக்கோளாறினால் எரிக்கப் பட்டுவிட்ட திசுக்களைப் புதுப்பிக்கவும், தவறான பயன்பாட்டினால் அரைகுறையாக அழிக்கப்பட்ட நரம்புகளின் உயிர்சக்தியை செலுத்துவதற்கும் விசேஷ உத்திகளைப் பெற்றுள்ளனர். நரம்பு மண்டலத்தில் உள்ள ஒவ்வொரு செயலும் திசுவும் உயிருள்ள, அறிவுள்ள கட்டமைப்பு ஆகும். உயிர்சக்தியானது அதனை எப்பொழுதும் புதுப்பிக்க முடியும்.”

இறைவனின் தொடர்பினால் எல்லா பயமும் தீர்ந்துவிடும் என்று குருதேவர் கூறுவது முற்றிலும் உண்மையே. பயம் மட்டுமல்ல, கவலைகளும் தீர்ந்துவிடும். ஒவ்வொரு மனிதனும் இறைவனின் குழந்தைகள் அல்லவா? தாயும் தந்தையும் நம் பக்கத்தில் இருக்கும்போது குழந்தை பயப்பட வேண்டிய அவசியமில்லையே. அதற்குக் கார ணம் தாய்தந்தையருக்கும் குழந்தைக்கும் பரஸ் பரம் உள்ள நெருக்கமும் அவர்களுக்குள் உள்ள அன்பும்தான். இந்த உறவும் அன்பும் நெருக்கமும் நிலையில்லாதவை. நமக்கும் இறைவனாகின்ற தந்தைக்கும் நடுவில் உள்ள நெருக்கமும் அன்பும்தான் நிலையானது. ஆனால் மனிதன் நிலையற்றவற்றை நேசிக்கிறான். ஒவ்வொருவருக்குள்ளும் உறைந்திருப்பது இறைவன்தான் என்பதை உணரும்பொழுது அந்த அன்பும் பாசமும் தெய்வீகமாகிவிடுகிறது.

இறைவனை அடையவேண்டும் என்ற குறிக் கோளுடன் வாழும் ஒருவனுக்கு நிச்சயம் இறை வன் தன்னை உணரவைப்பான். அதன்பிறகு அவன் எல்லா விதத்திலும் இறைவனை உணரும்படியாகவும், இந்த சுயநலமுடைய மற்றும் ஆபத்துக்கள் நிறைந்துள்ள இவ்வுலக வாழ்க்கையிலிருந்து மனித மனதை வெளிக் கொணரவும் இறைவன்பக்கம் அவனுடைய மனதை குவிக்கச்செய்யும்படியும் இறைவன் கருணைகூர்ந்து அருள்வான்.

எவ்வாறெனில், அதற்கான ஒரு உண்மைச் சம்பவமான சிறு உதாரணத்தைக் கூற விரும்பு கிறேன். இறை அன்பன் ஒருவனை அவனுடைய முக்கியமான உறவினர் ஒருவர் அலைபேசி மூலம் எதிர்பாராமல் தொடர்புகொண்டார். உடனே அந்த இறை அன்பன், உறவினரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு பதில் பேசினான். அப்பொழுது அந்த உறவினர் பேசிய வார்த் தையைக் கேட்டு இறை அன்பின் மிகுந்த வருத்தமடைந்தான். அந்த உறவினர் அவனை முன்னால் குத்தியதுபோன்று உணர்ந்தான். ஆனால் அவன் அதற்கு நல்ல விதத்தில் பதில் கூறியபின்னர் அலைபேசியை கீழே வைத்தான். அதன்பிறகு அவன் ஆழ்ந்து யோசித்தான். “எனக்கு இந்த அலைபேசியில் பேசியதால் மனம் நோகும்படியான சூழ்நிலை ஏன் வந்துள்ளது? இறைவா! நான் அறிந்தோ அறியாமலோ எந்தத் தவறும் செய்யவில்லையே! அது தங்களுக்குத் தெரியுமே இறைவா! இதற்கு என்ன காரணம்? இதற்கு என் மனம் சமாதானம் அடையும்படியான ஒரு நல்ல தீர்ப்பினை நீதான் எனக்கு வழங்கவேண்டும்” என்று இறைவனிடத்தில் மௌனமாகக் கூறிக்கொண்டு தன் வேலை களைக் கவனித்தவண்ணம் இருந்தான். சிறுது நேரம் கழித்து அவன், தன்னுடனிருக்கும் ஒரு முக்கியமான உறவினரிடத்தில் இது பற்றி கூறினான். “அலைபேசி மூலம் நீ அவரைத் தொடர்புகொண்டு அதுபற்றி பேசி தெளிவு படுத்திக்கொள்” என்று கூறினார் அவர். அந்த இறைபக்தனும் அதேபோன்று செய்தான். உடனே அந்த உறவினர் அதற்கு பதில் அளித்தார். முதலில் பேசியது போலன்றி மிகுந்த அன்புடனும் பொறுப்புடனும் உள்ள வார்த்தைகள் அந்த நபரிடமிருந்து வந்தது. அதைக் கேட்டதும் அவன் மிகவும் ஆச்சரியமடைந்தான். “இது மிகவும் விந்தையாக இருக்கிறதே” என்று எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அது மட்டுமின்றி மிக முக்கியமான விஷயம் என்ன





வென்றால் அதுவரை இருந்த அவனுடைய மனச்சஞ்சலம் அவனை விட்டுப்போய்விட்டது.

மிகுந்த வேதனையால் தவித்துக் கொண்டிருந்த மனம் சிறிது நேரத்தில்எந்தக் கவலையு மின்றி தூய்மையடைந்துவிட்டது.

இவையெல்லாம் இறைவனு டைய செயல்தான் என்பதை இறை அன்பன் புரிந்துகொண்டு, இறைவன்மேல் மேலும் அதிக நெருக்கமானவனாக ஆனான்.

இதிலிருந்து என்ன தெரியவருகிறது என்றால், இறைவனிடத்தில் சரணடைந்த பக்தன் ஒருவன் துன்புறுவதை இறைவன் பார்த்த உடனேயே அவனுடைய வேதனையை எளிதில் தீர்த்து விட்டார் பாருங்கள்! வீட்டிலிருக்கும் உறவின ரிடம் நடந்ததைக் கூறவைத்து அவர் மூலமாக தன் பக்தனின் மனவேதனைக்கு முற்றுப்புள்ளி வைத்தது மட்டுமின்றி, அலைபேசி மூலம் முதலில் அழைப்புவிடுத்த அந்த நபர்மேல் இறை பக்தனுக்கு இருந்த வருத்தத்தையும் துடைத்துவிட்டான் இறைவன். இறைபக்தனுடைய மனம் அதற்குமுன் இருந்த நிலைக்கு மாறாக மாற்றிவிட்டான் இறைவன். மனவருத்தத்தை ஏற் படுத்திய அந்த உறவினரை ஒரு நல்ல நண்பனாக நினைக்கும்படிச் செய்துவிட்டான் இறைவன். அதனால் இந்த விஷயத்தில் இறைபக்தன் மேலும் ஒருபடி தூய்மை அடைந்தவனாக ஆகிவிட்டான். இவ்வாறு சிறிதுசிறிதாக இறுதியில், மொத்தத்தில் இறைத்தன்மையை அடையவைப்பான் இறைவன் என்பதில் துளியும் ஐயமில்லை.

இவ்வாறுமற்றவர்களால்முடியாததைசெய்வதற்கு இறைவனால் மட்டும்தான் முடியும். மனிதர்களால் பகைமைதான் வளரும். இறைவனின் அன்பைப் பாருங்கள்! நிபந்தனையற்ற அன்பை! அந்த இறைபக்தனுக்கு தன்னுடைய இப்பிறவியில் அந்த நபரிடத்தில் துளியும் விரோதம் கொள்ளக்கூடாது என்ற உறுதிப்பாடும் வந்துவிட்டது. அது மட்டுமின்றி, இதுபோன்ற நிகழ்வினை நிகழ்த்து பவர்களிடத்தில் விரோதத்தைக் கைவிட்டு அன்புபாராட்டும்படியாகச் செய்தான்.

அந்த தன் பக்தனுக்கு புரியவைத்து, மனதை மாற்றி அமைத்தான் இறைவன். இதுதான் இறை வனுடைய மிக அற்புதமான குணம். இறை பக்தனுக்கு இது நிரந்தரமான ஒரு பாடமாக அமைந்தது.

> “பரம்பொருளை அறிந்தவன், பரப் பிரம்மத்தில் நிலை பெற்றிருப்பவன்,நெறிதவறாத அறிவுடன் மாயையிலிருந்து விடுபட்டு, இன்பமான அனுபவங்களினால் மகிழ்ச்சி அடைவதுமில்லை; துன்பமான அனுபவங்களினால் மனந்தளர்வதுமில்லை”

இதற்கு மற்றொரு கருத்தினையும் இறைவன் உணர்த்துவதாக நான் கருதுகிறேன்.

சமநிலை மனப்பான் மையை உருவாக்கி அத னை வளர்ப்பதற்குக்கூட அந்த இறைபக்தனை தயார் செய்வதற்காகவும் இறைவன் அருள்புரிந் திருக்கலாம். அதேபோன்று அச்சத்தை விலக்கிக் கொள்வதற்கான உத்திகளையும் குருதேவர் கூறியுள்ளார்.

நம்முடன் இருப்பவர் களில் யாருக்காவது உடல் நிலை சரியில்லையெனில் இறை வனிடத்தில் எவ்வாறு பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதுபற்றிய உத்திகளையும் குரு தேவர் கூறியுள்ளார். இறைவனிடத்தில் முழு நம்பிக்கையுடன் செய்தால் எந்த பயமும் இருக்க வாய்ப்பிராது. மனதிலிருந்து பயமெல்லாம் துளிகூட மீதியின்றி நீங்கிவிடும். ‘நாரதன் கலகம் நன்மையில் முடிவுறும்’ என்பதுபோன்று இறைவனின் கருணையான பார்வையும் அருளும் ஏற்பட்டால் துன்பமயமான சூழ்நிலை மாறி இன்பமயமான, ஆனந்தமயமான சூழ்நிலை ஏற்படுகிறது. இதுபோன்று இறைவன் தன் குழந்தைகளை தன்னுடன் இணைத்துக்கொள்வதற்காக பலவழி களினூடேயும் முயற்சி செய்துகொண்டிருக்கிறான் என்பது தெரியவருகிறது.

இறைவனைநேசிக்கும்ஓர்ஆத்மா,பேரன்பனான இறை வனிடத்தில் நம் அன்பின் அளவினைக் காட்டி, குருதேவர் கூறுவதுபோன்று பக்தன் இறைவனை நம்ப வைத்தபின்னர் மட்டும்தான் மேலே கூறிய வழிகளினூடே இறைபக்தனின் மனதை மாற்றுவதற்கும் மற்றவர்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கும் உள்ள பாடங்களை கற்றுத்தருகிறான். இவையெல்லாம் இறைத்தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் உண்டாகும் நன்மைகளாகின்றன. எனவே மனிதனாகப் பிறந்தவர்கள் அனைவரும் தியானத்தின் மூலம் இறைத்தொடர்பை ஏற்படுத் திக்கொள்ளவேண்டும் என்று குருதேவர் கூறு வதை அனைவரும் கடைபிடிக்கும்படி மிகுந்த அன்புடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

# குருக்ருபை எவ்வாறு பலன் தருகிறது?

ஒரு காரியம் வெற்றி அடைவதற்கு அதன் பல்வேறு பகுதிகள் காரணமாகின்றன. ஸ்தூலத்தைக் காட்டிலும் சூட்சுமம் அதிக சக்தி வாய்ந்தது. அதேபோல் அணுகுண்டைக் காட்டிலும் பரமாணுகுண்டு அதிக சக்தி வாய்ந்தது. கீழே கொடுக்கப்பட்டுள்ள உதாரணத்தின் மூலம் இது நன்கு விளங்கும். எதிரியை பலவித வழிகளில் கொல்ல முடியும். ஒரு வழியைக் காட்டிலும் அடுத்த வழி அதிக சக்தி வாய்ந்தது.

1. பஞ்ச பூதங்கள் (ஸ்தூலம்): எதிரி எங்குள்ளான் என்பதை பஞ்ச ஞானேந்த்ரியங்கள் மூலம் அறிந்து, அவன் எங்கு தென்படுகிறான், அவன் நடவடிக்கைகள் எங்கு காணப்படுகின்றன என்பதை அறிந்து துப்பாக்கி மூலம் அவனை அழிக்க முடிகிறது. மாறாக எந்தவித சத்தமும் எழுப்பாமல் எதிரி மறைந்து காணப்பட்டால் அவனை துப்பாக்கி மூலம் அழிப்பது கடினம். இங்கு ஸ்தூல ஆயுதங்களே பயன்படுத்தப்படுகின்றன. வெவ்வேறு காரியங்களுக்கு வெவ்வேறு பொருட்களை உபயோகப்படுத்துகிறோம், உதாரணத்திற்கு வியாதி கிருமிகள் அழிய மருந்து மாத்திரைகள் உட்கொள்கிறோம். ஸ்தூலத்தின் மூலம் காரியம் நடவாதபோது சூட்சுமத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

2. பஞ்ச பூதங்கள் (ஸ்தூலம்) மற்றும் மந்திரம் (சூட்சுமம்): முந்தைய காலங்களில் மந்திரத்தை உச்சரித்து பாணத்தை விடுத்தனர். மந்திரபூர்வமாக பாணத்தின் மீது எதிரியின் பெயர் எழுதியிருப்பதால், எதிரி மூவுலகங்களில் எங்கு ஒளிந்து கொண்டிருந்தாலும் அவனைக் கண்டுபிடித்து அழிக்கும் சக்தியை அந்த பாணம் பெற்றிருந்தது. இங்கு ஸ்தூல ஆயுதம் (பாணம்), சூட்சுமத்தோடு (மந்திரம்) இணைக்கப்பட்டது.



**இது நடக்கட்டும் என்று ஒரு உன்னத புருஷரின் (குரு) மனதில் தோன்றி விட்டால் அது நடந்தே விடுகிறது.**

3.மந்திரம் (அதி சூட்சுமம்): அடுத்த நிலை யில் துப்பாக்கி, தோட்டா ஆகிய ஸ்தூலஆயுதங்களை உபயோகிக்காமல் விசேஷ மந்திரங்களின் மூலம் எதிரிகளைக் கொல்வது. இதில் மந்திரத்தை மட்டுமே ப்ரயோகிப்பதால் அதி சூட்சுமமாகிறது.

4.வெளிப்பட்ட ஸங்கல்பம் (மேலும் அதி சூட்சுமம்): இது நடக்கட்டும் என்று ஒரு உன்னத புருஷரின் மனதில் தோன்றி விட்டால் அது நடந்தே விடுகிறது. இதைத் தவிர அவர் வேறு ஒன்றும் செய்யத் தேவையிருப்பதில்லை. 70 சதவிகித ஆன்மீக நிலைக்கு மேலுள்ள உன்னத புருஷர்களுக்கு இது சாத்தியமாகிறது. சிஷ்யனின் ஆன்மீக முன்னேற்றம் ஏற்படட்டும் என்ற ஸங்கல்பம் குருவின் மனதில் எழுந்தால் அது நடந்தே விடுகிறது. இதுவே குருக்ருபை ஆகும். இதை விடுத்து ஒரு சிஷ்யனின் ஆன்மீக முன்னேற்றம் நடப்பதில்லை.

ஸங்கல்பம் எவ்வாறு செயல்படுகிறது?: ஸங்கல்பத்தால் காரியம் நிறைவேற ஆன்மீக நிலை குறைந்தபட்சம் 70 சதவிகிதம் இருத்தல் வேண்டும். (சராசரி மனிதனின் நிலை 20 சத விகிதம் மற்றும் மோக்ஷ நிலை 100 சதவிகிதம் ஆகும்.) ஸங்கல்பம் எவ்வாறு காரியத்தை நடத்துவிக்கிறது என்பதை கீழ்க்கண்ட உதாரணத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். மனிதனின் மனசக்தி 100 அலகுகள் என வைத்துக் கொள்வோம். ஒவ்வொருவரின் மனத்திலும் நாள் முழுவதும் ஏதாவது எண்ண அலை மோதிக் கொண்டே இருக்கிறது. இவைகளுள் அலுவலகம், வீடு, குடும்பம் பற்றிய எண்ணங்களும் அடக்கம். ஒவ்வொரு சிந்தனை மற்றும் சிந்தனையில் செயல்பாட்டால் (உதாரணம் நான் அலுவலகம் செல்ல வேண்டும், ஒரு குறிப்பிட்ட காரியத்தை முடிக்க வேண்டும், ஒரு குறிப்பிட்ட நபரை சந்திக்க வேண்டும்.) சிறிது சக்தி செலவாகிறது. ஒருவரின் மனதில் இது போன்று ஒரு நாளில் 100 எண்ணங்கள் ஏற்பட்டால் அவரின் சக்தி முழுவதும் செல வழிந்து விடும்; ஆனால் அவரின் மனதில் எந்த எண்ணமும் தோன்றாமல் மனம் எண்ணமற்ற நிலையில் இருக்கும்போது இந்த காரியம் நடக்கட்டும், என்ற எண்ணம் ஏற்பட்டால் அந்த ஒரு எண்ணத்தின் பின்னால் 100 அலகு சக்தியும் உள்ளது. அதனால் அது (ஸங்கல்பம்) நடக்கிறது. அந்த எண்ணம் ஸத்விஷயமாக இருந்தால் அவரின் சொந்த ஸாதனை பலன் வீணாவதில்லை. இறைவனே அந்த காரியத்தை நடத்துவிக்கின்றான்; ஏனென்றால் அது ஸத் காரியம், அதாவது இறைவனின் காரியமாக உள்ளது. இது சாத்தியமாவதற்கு நாமஜபம், ஸத் ஸங்கம், ஸத்ஸேவை, ஸத்யத்திற்காக தியாகம் என்ற வழியில் ஸாதனை செய்து, வேண்டாத எண்ணங்களே மனதில் தோன்றாத நிலையை அடைய வேண்டும்.

5.வெளிப்படாத ஸங்கல்பம் (சூட்சுமாதி சூட்சுமம்): இங்கு சிஷ்யனின் ஆன்மீக முன்னேற்றம் ஏற்படட்டும் என்று குரு மனதில் சங்கல்பம் ஏற்படாமலேயே தானே சிஷ்யனின் முன்னேற்றம் ஏற்படுகிறது. இதற்கு காரணம் குருவின் வெளிப்படாத ஸங்கல்பம். 80 சத விகிதம் ஆன்மீக நிலையை கடந்த ஒரு குருவினால் மட்டுமே இது சாத்தியமகிறது.

6.குருவின் இருப்பு (சூட்சுமாதி சூட்சுமத்திற்கு அப்பால்): இந்த இறுதி நிலையில் குருவின் இருப்பால் மட்டுமே அல்லது அவரின் அருகாமையினால், ஸத்ஸங்கத்தால் மட்டுமே ஒரு சிஷ்யனின் ஆன்மீக ஸாதனை மற்றும் ஆன்மீக முன்னேற்றம் தானாகவே நடைபெறுகிறது.

90 சதவிகிதம் ஆன்மீக நிலையை தாண்டிய பராத்பர குரு ஈச்வரனோடு ஒன்றிவிடுகிறார். ஆகவே அவர்களின் வ்யாபிக்கும் தன்மையால், சிஷ்யனின் ஆன்மீக உணர்வின் சக்தியால், சிஷ்யனின் ஆன்மீக ஸாதனை மற்றும் ஆன்மீக முன்னேற்றம் நடைபெறுகிறது.

மேலே கூறியுள்ள வழிகளின்படி குருக்ருபை செயல்படுகிறது.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு : 09380949626

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033



# கண்ணுக்கு காதுக்கு உபதேசம் தந்து உன்னை உயர்த்துபவனே குருநாதன்

பலகீனமாக மனிதன் சிந்தித் தால் குடும்ப வாழ்க்கையை மட்டும் அன்றாட தேவைகளை மட்டுமே சிந்திக்க முடியும். பலமாகச் சிந் தித்தால் தான் பக்தி மார்க்கம் அமையும்.

கல்லாயிருந்தாலும் புல்லா யிருந்தாலும் எதையும் மதிக்கத் தெரிந்தவன் தடுக்கி விழ மாட்டான். அதனால் கஷ்டம் வந்தபின் தான் கடவுளை எண்ண வேண்டும் என்று இருக்கக் கூடாது.

பிரச்சினைகளை நினைப் பதற்கு முன் கடவுளை நினைத்து விட்டால் பிரச்சினைகளே வந் திருக்காது.

கடவுளை மையமாக வைத்து சில்லரை வேலை செய்தால் கடவு ளிடம் அகப்பட்டுக் கொள்வீர்கள். பக்தன் என்ற நிலையையும் அடை வீர்கள்.

கடவுளிடம் வரும்போதாவது ஆசையை விடுங்கள். மற்ற நேரங்களில் எவ்விதமாகவேனும் இருந்து கொள் ளுங்கள்.

பொருளால் ஏற்படும் பயம் நீங்கினால் ஞானம் வரும். நமக்கு நீங்காததால் பொருளை ஈட்டிக் கொண்டே போகிறோம். பயம் நீங்கிவிட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் சம்பதிக்கலாம்.

பெருந்தன்மை ஆற்றலை புரிந்து கொள்வது ஞானம். அது எங்கெல்லாம் இருக்கிறது என்று தெரிந்து கொள்வது பேராற்றல் பிரும்ம ஞானம்.

பெரிய விஷயங்களையெல்லாம் தெரிந்து கொண்டுவிட்டால் காரணமானவன் சிறியவனாகி உன்னிடம் அடங்கி விடுகிறான். ருசி இருந்தால்தான் அவனைத் தேடிப் போவீர்கள்.

நாம் செய்யும் செயல்களினால் அடுத்தவர்களுக்கு எந்த வருத்த மும் துன்பமும் வரக்கூடாது. இதுவே கர்வமாகும். செயல் வீரர் களின் தன்மை இதுவே.

பசியை உணர்ந்தவன் உண்டு. உணவைப் பார்த்து திருப்தி அடைந்தவன் கிடையாது.

பொருளாதார துன்பம் உடலையே பாதிக்கிறது. சம்பாதித்தால் அது தீர்ந்துவிடும். துயரம் மனதைப் பொறுத்தது. பக்தி செய்து இறைவனை வழிபட்டால் ஒழிய அது தீராது. கண்ணுக்கு காதுக்கு உபதேசம் தந்து உன்னை உயர்த்துபவனே குருநாதன்.



## சீடனும் ஞானிகளும்

**சீடன்:** பக்தி என்றால் என்ன?

**ஞானி:** சிறப்பான அன்பிற்கு தான் பக்தி என்று பெயர். அன்பான பொருளையே மனதோடு சேர்த்து வைத்துக் கொள்வீர்கள். அதை இழந்தால் தான் அதன் சிறப்பு தெரியும்.

**சீடன்:** மந்திரங்கள் எதற்கு?

**ஞானி:** யாரையாவது சந்திக்க வருகிறேன் என்று தெரிவிக்க ஐம்பது பைசாவுக்கு கார்டு போடுகிறாய். மந்திரம் கடவுளை சந்திக்க நீ உபயோகிக்க வேண்டிய கார்டு.

**சீடன்:** பக்தி எப்பொழுது வரும்?

**ஞானி:** உலக, தெய்வீகக் கருத்துகளில் சிறைபட்டிருக்கிறோம். இதிலிருந்து விடுதலை அடைந்தால் தான் பக்தி வரும்.

**சீடன்:** இதற்கு வழி?

**ஞானி:** அறிவுக்கு அறிவைத் தருவது உபதேசம். அதைத் தருபவன் குரு. அப்படிப்பட்ட குருவைப் பார்க்க வேண்டும் என்ற தாகம் ஏற்பட்டால் பக்தி வரும்.

**சீடன்:** குரு என்பவர் எப்படிப்பட்டவர்?

**ஞானி:** எதற்காக வாழுகிறோம், எதற்காக வாழவேண்டும் என்று காட்டிக் கொடுப்பவனே குரு.

**சீடன்:** அதற்கு நம்பிக்கை வேண்டுமல்லவா?

**ஞானி:** யாரையும் நம்பாதே என்று நான் சொல்வதில்லை, எல்லோரிடமும் அன்பாயிரு, வெறுக்காதே. குரு தானே கிடைப்பான்.

**சீடன்:** அதற்கு முதல் படி என்ன சுவாமி?

**ஞானி:** சிந்தித்து முன்னேறு. சீரிய வாழ்க்கையின் முதல் மைல் கல் அது. சிந்திக்காத மனிதன் வெற்றியை யோசித்துக் கொண்டிருப்பான்.

– ஞானச்சேரி ஞானிகள் –

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# “ஆ(ம)ஹா பாரதம்”

பாகம் 19

அதே சமயம் வினதா உத்தமமான புதல்வனைப் பெற வேண்டி விரதம் இருந்தாள். கச்யபர் அவளிடம் “தேவி உன் விரதம் வெல்லும் விதமாய் மூவுலகையும் வெல்லும் சக்தியுடைய இரு புதல்வர்கள் பிறப்பார்கள். பால கில்யர்களின் தவமும், எனது சங்கல்பமும் உனது பூஜையின் பலனாய் வந்து சேரும். உன்னுடைய அப்புத்திரர்கள் பறவைகளின் இந்திர பதவியை அடைவார்கள். எனவே நீ உன் கர்ப்பத்தை எச்சரிக்கையோடு காத்து வா” என்று கூறினார்.

ஒரு விஷயம் பாருங்கள். முன்பெல்லாம் ஒரு பிள்ளையை பெற வேண்டும் எனும் போது பல விதமான விரதங்கள் இருந்து, அந்த விரதத்தின் பலனாய் தாம் விரும்பியபடியே பிள்ளைகளைப் பெற்றனர்.

ஏன்? இப்போது மட்டும் விரதங்கள் யாரும் இருப்பதில்லையா என்ன? என்றால் நிச்சயம் இருக்கிறார்கள். ஆனால் அது ஏதோ ஒரு பிள்ளை பிறந்தால் போதும் எனும் நிலையில் இருந்து விடுகிறது. முன்பு அப்படியில்லாமல் தர்மத்திற்குரிய பிள்ளைகளை பெற வேண்டும் என்றால் அப்படியே பெற்றனர். அது போலவே அதர்மத்திற்குரிய பிள்ளைகளையும் பெற்றனர்.

மேலும் இந்திரனிடம் “இந்திரா! இந்த இரு சகோதரர்களால் உனக்கு எந்த நஷ்டமும் உண்டாகாது. நீயே இந்திரனாக இருப்பாய். இனி ஒருபோதும் மகாத்மாக்களை கிண்டல் செய்யாதே. அவர்களிடமும் வாக்கு எனும் வஜ்ராயுதம் இருக்கிறது என்பதை கவனத்தில் வை” என்று கூறினார்



இதுவரை இந்த சம்பவத்தை சொல்லி முடித்த சூதர் “இனி கருடனின் வீரத்தையும், விரதத்தையும் தெரிவிக்கிறேன்” எனக் கூறலானார்.

தேவர்கள் அனைவரும் இந்திரனின் கட்டளையால் போருக்கு பல வகையான அஸ்திரசஸ்திரங்களோடு தயாராகி இருந்தனர். கருடனும் வந்து சேர்ந்தார். கருடனை கண்டதுமே இவர்களது கைகளில் இருந்த ஆயுதங்கள் தானாகவே மோதிக் கொண்டன. அமுதத்தை காத்து வந்த விஸ்வகர்மா கருடனோடு போரிட்டு பலத்த காயங்களோடு வீழ்ந்தார்.

கருடனின் பலத்தால் கந்தர்வர்கள், வசுக்கள், ருத்திரர்கள், ஆதித்யர்கள், அஸ்வினி குமாரர்கள் அனைவரும் ஆளுக்கொரு திசையில் ஓடி மறைந்தனர். தேவர்களின் பல வித ஆயுதங்களால் தாக்கப்பட்ட பலமான பல அடிகளைத் தாங்கிக் கொண்ட கருடன் சிறிதும் சளைக்காமல் போர் புரிந்து, நாற்புறமும் பயங்கரமான தீ நாக்குகள் எரிய அதன் மத்தியில் இருந்த அமுதத்தை கண்டார். தன் உடலில் எண்ணற்ற வாயை வெளிப்படுத்திக் கொண்டு, அவைகளில் நதிகளிலிருந்து எடுக்கப்பட்ட நீரைக் கொண்டு வந்து தீயின் மீது கொட்டி அதை அணைத்து விட்டு அமுதத்தின் அருகில் செல்வதற்கேற்ப சிறிய உருவத்தைக் கொண்டார்.

கச்யபரின் வாக்குப்படி வினதா இரு புதல்வர்களை பெற்றெடுத்தாள். அருணன் சூர்யனுக்கு சாரதியாகி அவருக்கு முன்னால் செல்சிறார்.. கருடன் பறவைகளின் இந்திரனாக அப்பதவியில் அபிஷேகம் செய்விக்கப்படுகிறார்.

பெரும்பாலும் நமக்கு இந்திரன் என்பவன் ஒருவன் தான் என்றே தெரியும். ஆனால் இங்கு பறவைகளுக்கு இந்திரன் என்று வருகிறது. இதனால் ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு இந்திரன் இருப்பான் என்ற எண்ணம் நம்முள் எழுவதற்கு வாய்ப்பு உண்டாகிவிடும்.

உண்மை என்னவெனில் இந்திரன் என்றால் நம் இந்திரியங்களையே தத்துவார்த்தமாக சொல்வோம். அதன்படி பறவைகளின் இந்திரியங்கள் மனிதரது இந்திரியங்கள் படி செயல்படுவதில்லை என்பதை சற்றே வேறுபடுத்திக் காட்டவே இது சொல்லப்பட்டது. மற்றும் காட்டிற்கு ராஜா சிம்மம் என்பது போல் பக்ஷி களுக்கு ராஜா கருடன் இந்திரன் போல் நமக்கு அவரது பலத்தை எடுத்து சொல்லப் படுகிறது.



சிறிய உருவத்துடன் அமுதம் இருக்கும் இடத்திற்கு வந்ததும் அங்கு நான்கு கத்திகளோடு கூடிய சக்கரம் ஒன்று சுத்திக்கொண்டிருந்தது. தன் உருவை மிகச் சிறியதாக்கிக் கொண்டு கணப்பொழுதில் உள்நுழைந்து விட்டார். அங்கு இரண்டு சர்ப்பங்கள் தன் கூர்ய கண்களை இமைக் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தன. அவைகள் நேராக யாரைப் பார்க்கின்றதோ அவர்கள் உயிர் போகும் படியாக ஒரு அமைப்பு செய்யப்பட்டிருந்தது. கருடன் அவைகளின் கண்களில் மறைந்திருந்தபடியே மண்ணைத் தூவிவிட்டு, அவைகளை அடிக்கவும், நசுக்கவும் செய்யலானார்.

அதன் பின் அவ்விரு சர்ப்பங்களையும் துண்டாக்கினார். சக்கரத்தையும் ஒடித்து துண்டாக்கினார். பின் அமுதத்தை எடுத்துக் கொண்டு மிக வேகமாக பறந்துச் சென்றார். அதிலிருந்து ஒரு துளியும் தான் பருகவில்லை.

எந்த ஒரு மனிதன் ஒன்றை அடையும் பொருட்டு அரும்பாடு படுகிறானோ, அவனால் அதை முழுமையாக அனுபவிக்க முடியாமலே போய் விடுகிறது. இது பலரின் வாழ்வில் நடைபெறும் அவல நிலையாகவே மாறி விட்டது. அதையும் தாண்டி யாரோ ஒருவரின் வாழ்வில் அதனை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைக்கும் போது அவர்கள் அதனை அனுபவிக்காமல் தியாகம் செய்து விடும் போது தான் அவர்கள் மாபெரும் மனிதராக போற்றப்படுகிறார்கள். அந்த வகையில் பக்ஷிகளின் இந்திரனான கருடன் மாபெரும் புனிதர் தான்.

அமுதத்தோடு கருடன் வானில் பறந்து செல்லும் பகவான் விஷ்ணுவை சந்திக்க நேர்ந்தது. கருடன் அமுதத்தை பருகாமல் தன் தாய்க்காக மட்டுமே எடுத்துச் செல்லும் அந்த உத்தம குணத்தைக் கண்டு ஆனந்தமடைந்தவராய் “கருடனே! உன் குணம் என்னை மகிழச் செய்கிறது. ஆகவே உனக்கு ஏதேனும் வரம் அளிக்க விழைகிறேன். என்ன வேண்டுமோ கேள்” என்றதும் “சுவாமி ! நான் தங்களுக்கு மேலே இருக்க வேண்டும். மற்றும் இந்த அமுதத்தை பருகாமலே மூப்பும், மரணமும்

இல்லாதிருக்க வேண்டும்“ எனக் கேட்ட கருடன் பதிலுக்கு விஷ்ணுவிடம் “நானும் தங்களுக்கு வரம் அளிக்க விரும்புகிறேன். நீங்களும் கேளுங்கள் என்றதும் விஷ்ணுவும் கருடனை தனது வாகனமாக இருக்கும் படி கேட்டுக் கொண்டதோடு, கருடனுக்கு தனது கொடியில் இடமளிப்பதாகவும் உன் விருப்பப் படியே நீ எனக்கு மேலேயே எப்போதும் இருக்கலாம் என்றும் அப்போதே தெரிவித்து விட்டார்.

ஒரு புராணத்தை படித்து விட்டு வீண் வாதம் செய்துக்கொண்டிருப்போர் அனைத்துப் புராணங்களோடு இது போன்ற இதிஹாசங் களையும் சேர்த்துப் படிக்க வேண்டும். அப் போதுதான் ஏற்றத் தாழ்வு, பெருமை சிறுமை என்பதெல்லாம் நம் மனதிலிருந்து நீங்கிப் போகும்.

விஷ்ணுவானவர் வரம் கேள் என்று கருடனிடம் கேட்டு வரம் தருகிறார். கருடனும் நீங்களும் வரம் கேளுங்கள் என்று சொல்லி வரம் தருகிறார். மிக அற்புதமான ஒரு இடம் இது. கதை போகும் போக்கிலேயே போகாமல் சற்றே நிதானித்துப பார்த்தால் மட்டுமே புரியும்.

விஷ்ணுவிடம் விடைப் பெற்றுக் கொண்டு மேலும் வேகமாக பறக்கலானார். வழியில் இந்திரன் வஜ்ராயுதத்துடன் நின்றுக் கொண் டிருக்க, அதையும் தாண்டி கருடன் செல்ல முற்பட்டபோது. இந்திரன் வஜ்ராயுதத்தால் ஓங்கி அடித்து விட, கருடன் “தேவராஜனே! இந்த வஜ்ரமாக இருக்கும் முனிவரை நான் பெரிதும் மதிக்கிறேன். அதே மதிப்புடன் உன்னையும் நேசிக்கிறேன். இதோ நீ அடித்த இந்த அடி என் மீது விழுந்ததற்கு சான்றாகவும், வஜ்ரத்தின் மதிப்பை மேம்படுத்தவும் எனது ஒரு சிறகினை தியாகம் செய்கிறேன். உன் வஜ்ர அடியால் என் உடலில் சிறிய துன்பமும் உண்டாகவில்லை.

கருடன் தன் வீரத்தை எத்தனை வினயமாக காட்டிக் கொண்டதோடு தன் சிறகையும் த்யாகம் செய்ததைக் கண்ட பிராணிகளுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. அந்த மகிழ்ச்சியோடு கருடனுக்கு அழகிய இறகுடையவன் எனும் பொருள்படும்படியாக “சுபர்ண” என்று பெயரிட்டன.

இந்த ஆச்சர்யத்தைக் கண்ட இந்திரன் இது சாதாரண பக்ஷியல்ல. பறவை உருவில் உள்ள ஒரு மகாத்மா என்று அறிந்து “நான் உன் உத்தம குணத்தை அறிய விரும்புவதோடு, உன்னோடு நீங்காத நட்பு கொள்ளவும் விரும்புகிறேன்” என்று கூறினான்.

அடுத்த இதழில்....

- **Thali,** Ph:09786223577

மற்றவர்களும் பயன்பெற
அறிமுகப் படுத்துங்கள்....

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் வாட்சப் எண் மற்றும் இ-மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்
whatsapp: 8825844033
aanmeegamalar@gmail.com





# அமர்நாத் பயணம்

அமர்நாத் பனிலிங்க தரிசனத்திற்கு சென்னை யிலிருந்து முதல் குழு 28.06.2018 அன்று சென்னை சென்ரல் இரயில் நிலையத்திலிருந்து கிளம்பவிருக்கிறது.

சென்னையிலிருந்து டெல்லி சென்று அங்கி ருந்து தனது யாத்திரையை துவங்கவுள்ளது. இதுகுறித்து இந்த பயணத்தை வழிநடத்தும், சிவதில்லைராமசாமி தங்களது பயணத்தை பற்றி மேலும் கூறியது...

இதுவரை தொடர்ந்து 18 முறையாக அமர்நாத் பனிலிங்க தரிசனம் செய்து வருகிறோம். தற்போது 19வது முறையாக பயணத்தை துவக்கவுள்ளோம்.

01.07.2018 அன்று ஜம்முவில் உள்ள ரகுநாத் மந்திர், ரன்வீர் சிங் மந்திர் தரிசனம், இந்தக் கோவிலின் சிறப்பு 33 கோடி தேவர்கள் வழிபாடு செய்த இடத்தில் கட்டப்பட்டது. சுமார் மூன்று கோடி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து கட்டப்பட்ட தலம்.

02.07.2018 அன்று ஜம்முவிலிருந்து 120 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள சிவ்கோரி மலை குகைக்கோயில்,

04.07.2018 பெகல்ஹாம் செல்லுதல் இங் கிருந்து பயணம் துவங்குகிறது. துவங்கிய பயணம் சந்தன்வாரி, பிஷூடாப், சேசுபால், ஷேஷ்நாக் போன்றவற்றை கடந்து, அங்கேயே இரவு பெழுதை கழித்து பின் அதிகாலை 5 மணியளவில் நடை பயணத்தை துவங்கி கணேஷ்டாப், போஸ்பத்திரி, பஞ்சதரணி, கடந்து இறைவனை காணும் பாக்கியம் கிடைக்கும்.



குபா, இறைவனை நாம் கண்டு சங்கமிக்கும் இடம் என்பதால் இந்த இடத்திற்கு சங்கமம் என்று பெயர். குபாவில் அமர்நாத் தரிசனம் ஆனந்தமாக கண்டு தரிசித்தபின் ஸ்ரீநகர் நோக்கி பயணம் துவங்கும்.

இங்கு தால் ஏரி எதிரில் உள்ள ஆதி சங்கரரால் 2,500 ஆண்டுகளுக்கு முன் நிறுவிய அதி அற்புதமான திருக்கோயில், மலைமீது ஏழு கிலோ மீட்டம் தூரம் வாகனத்தில் பயணம், அங்கு சுவாமி தரிசனம் செய்த பின் அதற்கு நேர், எதிர் மலையில் உள்ள மற்றும் ஒரு சிவ தலமான ஹரிபர்வத் என்னும் தலத்திற்கு சென்று அங்கே திருச்சி தாயுமானவர் போல் மலையே சுயம்புவாக உள்ள சிவபெருமானை மனதார தரிசித்து சென்னை திரும்புகிறோம் என்றார்.

மேலும் எங்கள் பயணத்தில், விருப்பமுள்ள சிவ பக்தர்களும் கலந்து கொள்ளலாம், பயணத்தைப் பற்றி முழுவதுமாக தெரிந்து கொள்ள 09444500309, 07010465693 என்ற எனது தொலை பேசியிலும் தொடர்பு கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.



# மனித வாழ்க்கையும் சித்தர்களும்

“காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே “
பிறக்கும்பொழுது கொண்டுவருவதில்லை பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொண்டுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்த தென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக்கென் சொல்வேன்கச்சி ஏகம்பனே.

– பட்டினத்தார்

இந்த மண் மீது பிறந்து வரும்போது நாம் எதுவும் கொண்டு வருவதில்லை அதே போல இறந்து போகும்போதும் எடுத்து போவ தில்லை இடையில் வரும் செல்வத்தை சிவன் தந்ததென்று பிறருக்கு கொடுத்து உதவாமல் நமதென்று இருந்து கடைசியில் எந்த பயனும் இல்லாமல்

இறந்து போகிறவர்களுக்கு நான் என்ன சொல்லமுடியும் .பிறப்பதும் நிர்வாணம் இறப்பதும் நிர்வாணம் , உடலெடுத்து வந்த நாம் அந்த உடலையும் எடுத்துப் போக முடியாது .நிலையான சிவ பதத்தைத் தேடுவோம் நம்மால் இயன்ற வரை உதவி செய்வோம் .

அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே! விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி இரு
கைத்தலை மேல்வைத் தழும் மைந்தரும் சுடு காடு மட்டே!
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே!

– பட்டினத்தார்

நாம் வாழ்ந்த வாழ்க்கையும் தேடிய செல்வமும் வீட்டோடு இருந்து விடும் நம் சுக துக்கத்தில் பங்கு கொண்ட மனைவியும் வீதியோடு நின்று விடுவாள் . நாம் பெற்ற மைந்தரும் தலையிலடித்து அழுது கொண்டு சுடுகாட்டுக்கு வந்து ஈமக்கடனை முடிக்கும் வரைதான், முடிவில் நம்முடன் வருவார் யார் ? நாமும் யாருடனும் செல்ல முடியாது நம்முடன் யாரையும் அழைத்துச் செல்லவும் முடியாது, நாம் செய்த நன்மை தீமை என்ற இருவினையும் தாம் நம்மைத் தொடர்ந்து வரும் அதனால் புண்ணியம் இல்லாவிட்டாலும் பாவம் செய்யாமலிருப்போம்.

இதையே பாம்பாட்டி சித்தரும் தன்னுடைய பாக்களில் ......

நாடுநகர் வீடுமாடு நற்பொரு ளெல்லாம்
நடுவன் வரும்பொழுது நாடி வருமோ
கூடுபோன பின் பவற்றாற் கொள்பய னென்னோ
கூத்தன் பதங் குறித்துநின் றாடாய் பாம்பே.

– பாம்பாட்டி சித்த

விட்டுவிடப் போகுதுயிர் விட்ட உடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் பட்டது பட்டு
எந்நேரமும் சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்.

– பட்டினத்தார்

உயிர் எப்போது வேண்டுமானாலும் பிரியலாம் உயிர் பிரிந்த உடனே நம் உடலை சுட்டுவிடப்போகின்றனர் நமது உறவினர்கள். பட்டதெல் லாம் போதும் எந்நேரமும் சிவசிந்தனையிலே இருங்கள் சிவத்தை போற்றுங்கள் அதுதான் சுகம் , நிலையானது நம்மை வழி நடத்தி செல்லக் கூடியது.

இதே கருத்தை ஒத்து பாம்பாட்டியாரும்

நீரிலெழும் நீர்க்குமிழி நிலைகெ டல்போல
நில்லாதுடல் நீங்கிவிடும் நிச்சய மென்றே
பாரிற் பல உயிர்களைப் படைத்த வன்றனைப்
பற்றவேநீ பற்றித்தொடர்ந் தாடாய் பாம்பே.

–பாம்பாட்டிசித்தர்

நீர்மேல் எழும் நீர்க்குமிழி நிலையில்லாமல் நொடிப்பொழுதில் தோன்றி மறைந்து விடும் . அதே போல இந்த உடலும் ஓர் நாள் மறைந்து விடும். இந்த உண்மையை மனதில் கொண்டு அனைத்து உயிர்களையும் படைத்தவன் எம்பெருமான் சிவன் பதத்தை நிலையாக பற்றிக்கொள்ள வேண்டும் .

நந்த வனத்திலோர் ஆண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி.

– கடுவெளி சித்தர்

இந்த பாடல் அனைவருக்கும் நன்கு தெரிந்த ஒரு பாடல். இது சாதாரண ஆண்டி, குயவன், தோண்டி கதையல்ல. நம் உடலை பற்றிய அழகான சிந்தனை. பிறவிகளிலேயே மிகவும் உன்னதமான பிறவி இந்த மானிடபிறவி .இதை சரியாக பயன்படுத்தி கடைத்தேற வழியைத் தேடாமல் உலக இன்பங்களில் சுழன்று மாயையின் பிடியில் சிக்கி இந்த பாடலிலே வரும் ஆண்டியைப் போல தனக்கு தோண்டி கிடைத்து விட்ட சந்தோசத்தில் தோண்டியை தலை மீது வைத்து ஆடி கடைசியில் அதை உடைத்தே விட்டான் . ஆண்டி எனும் இந்த ஆத்மா கடவுள் எனும் குயவனிடம் வேண்டி விரும்பி ,அவன் தர மறுத்த போதும் பத்து மாதங்கள் காத்திருந்து இந்த உடலெனும் தோண்டியை கொண்டு வருகிறது . தனக்கு தோண்டி (உடல் )கிடைத்து விட்ட சந்தோஷத்தில் கடவுளை மறந்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி முடிவில் அழிந்து போகிறது.

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம் பார் நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடு நீங்காமலே நமக்கு இட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே உபதேச மிதே.

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்பு பொம்மல்
ஆட்டமென் றேயிரு பொல்லா வுடலை அடர்ந்த சந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீர்
ஓட்டமென் றேயிரு நெஞ்சே உனக்கு உபதேசமிதே!

– பட்டினத்தார்

தெய்வம் ஒன்றுதான் உன் தெய்வம் என் தெய்வம் என்று தனியாக இல்லை இறைவன் சிவமே ஏகனாகவும் அநேகனாகவும் இருக்கிறார். இதையே மனிவாசகபெருமான் “ஏகன் அநேகன்” என்று தன்னுடைய திருவாசகத்திலே குறிப்பிடுகிறார் . நிலையில்லாத செல்வத்தை நம்பாமல் நிலையான செல்வமாகிய சிவனடியை போற்றுங்கள் .

பிற உயிர்களை அன்பு செய்யுங்கள் பசித்தவர்களுக்கு அன்னம் கொடுங்கள் அதுவே நல்ல அறம் . சத்குருவான சிவத்தை மட்டுமே நம்புங்கள் அவர் பாதத்தை மட்டுமே நம்பி இருங்கள் .இந்த உடலும் நம்முடன் இருக்கும் சொந்தம் அனைத்துமே அடர்ந்த சந்தைக்கூட்டம் . சந்தை கூடும்போது எவ்வளவு கூட்டம் இருக்குமோ அந்த சந்தை முடிந்தவுடன் கூட்டம் கலைந்து விடுகிறது அதே போல மண்ணுக்குள் புதைத்த உடலானது கலைந்து உருக்குலைந்து விடுகின்றது அது போல நமது சுற்றமும் அவர்கள் வேலை முடிந்தவுடன் கலைந்து சென்று விடுவார்கள். மனமே இதுதான் உனக்கு உபதேசம் என்று அவர் மனத்திடம் சொல்வதுபோல நமக்கும் சொல்கிறார் .

நீற்றைப் புனைந்தென்ன? நீராடப் போயென்ன? நீ மனமே
மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை மாமறைநூல்
ஏற்றிக் கிடக்கும் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்?
ஆற்றில் கிடந்தும் துறையறி யாமல் அலைகின்றையே !

– பட்டினத்தார்

திருநீற்றை தவறாது அணிந்தாலும் புனித நீராடினாலும் மனமே மாற்றிபிறக்கும் வழிதெரியாமல் என்ன பயன் அனைத்து நூல்களை கற்றாலும் மந்திரங்கள் பல கற்றாலும் என்ன பயன் உண்மையான பக்தி இல்லாவிட்டால் ஆற்றில் இருந்தும் கரை அருகிலேயே இருந்தும் கரையறியாமல் தேடி அலைகின்றாயே என்று வருந்துகிறார் .

பொய்யை ஒழியாய் புலாலை விடாய் காளத்தி
ஐயரை எண்ணாய் அறம் செய்யாய் வெய்ய
சினமே ஒழியாய் திருவெழுத்தைந்தும் ஓதாய்
மனமே உனக்கென்ன மாண்பு ?

–பட்டினத்தார்

மனமே, உன்னால் பொய் கூறுவதை நிறுத்த முடியவில்லை , மாமிசம் சாப்பிடுவதை நிறுத்த மாட்டாய் ,கோபத்தை தவிர்க்கவும் தெரியவில்லை, பிறர்க்குபகாரம், தர்மம், நல்லவைகளை செய்யவும் மாட்டாய், சிவபெருமானையும் நினைக்க மாட்டாய் அவரின் ஐந்தெழுத்து மந்திரத்தையும் உச்சரிக்க மாட்டாய் இதனால் உனக் கென்ன பெருமை கிடைத்து விடும் என தனது மனதிடம் கேட்கிறார்.

# கோயிலை காவல் காக்கும் சைவ முதலை...!

**கோவில்கள் அனைத்தும் மனிதர்களுக்கு மட்டும் அல்ல, ஒருசில கோவில்களில் பிரதானமாக விலங்குகளும் திகழ்வதுண்டு. அந்தவகையில் கேரளாவில் ஒரு அதிசயக் கோயில் உள்ளது.**

கேரள மாநிலம் காசர்கோட்டில் உள்ள அனந்தபுரா கோயில் பிரசித்திப் பெற்ற நிகழ்வு ஒன்று நடைபெற்று வருகிறது. இந்த கோயிலில் முதலைக் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்தக் கோயில் அனந்த பத்பநாப சுவாமியின் மூலஸ்தானமாக கருதப் படுகிறது. அனந்தபுரா கோயில் 9ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அதோடு பிரதான கோயிலை சுற்றி தலைவாயில் ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

பச்சைப் பசேல் என்று இருக்கும் இந்த கோயில் குளத்தில் கடந்த 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு முதலை ஒன்று வாழ்ந்து வருகிறது. இதை அங்குள்ள மக்கள் பபியா என பெயரிட்டு அழைக்கிறார்கள்.

இந்த முதலை கோயிலின் பாதுகாவலாக கருதப் படுவ தோடு, பக்தர்களால் மிகவும் மரியாதைக்குரிய பிராணியாகவும் மதிக்கப்படுகிறது.

அதோடு இந்த முதலை இறந்து போனாலும், அதன் இடத்தில் கோயிலை பாதுகாக்க மற்றொரு முதலை இந்த ஏரிக்கு வரும் என்றும் நம்பப்படுகிறது.

இதில் என்ன விசேஷம் என்றால், பொதுவாக முதலை இனமானது அசைவ வகையைச் சார்ந்தது. ஆனால், இந்த முதலையோ குளத்தில் உள்ள மீன்களைக்கூட சாப்பிடாது.

இந்த முதலைக்கு கோயில் குருக்கள், உச்சிக்கால பூஜையின் போது சாதம் வெல்லம் கலந்த உருண்டைகளை சாப்பிடக் கொடுக்கிறார். இதற்கு முசலி நைவேத்யா என்கிறார்கள்.

கோயில் குளத்தில் குளிக்க வரும் பக்தர்கள் மற்றும் குருக்கள்களை இதுவரை பபியா தாக்கியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சரியாக பிரசாதம் வழங்கப்படும் வேளைகளில் இந்த முதலை குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர்ந்து விடுகிறதாம். ஒன்றுக்கு மேற்பட்ட முதலையை இந்தக் குளத்தில் எவரும் கண்டதில்லை.

ஒரு முதலை இறந்து விடுமே யானால், மறுதினமே இன்னொரு முதலை தென்படுமாம். அருகில் வேறு ஆறுகளோ, குளங்களோ இல்லாத நிலையில் எப்படி இந்தக் கோயில் குளத்திற்குள் முதலை வந்தது என்பது எவருக்கும் புதியாத புதிர் என்கிறார்கள்.








அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033


ஆன்மிகமலர் மெயில் புக்

# தினசரி பிரணவ மந்திரத்தை யார் சொல்கிறார்களோ அவர்கள் வாழ்க்கையில் சர்வ மங்களமும் உண்டாகும்

இந்த உலகில் சத்தம் என்பது இல்லாத இடமே இல்லை. ஆழமான தண்ணீருக்குள்ளும் காற்றே புகாத மண்ணுக்குள்ளும் சத்தம் இருப்பதை நவீன விஞ்ஞானம் உறுதி செய்கிறது.

உலக முழுவதும் ஒலி மயமானது. ஒலியில் தான் உலகமே இருக்கிறது. இன்னும் ஒருபடி சொல்லப்போனால் உலகம் என்பதே ஒலிதான் என்று பலர் சொல்கிறார்கள். மனிதரின் மூலா தாரத்தில் ஏற்பட்டு கொண்டிருக்கின்ற ஒலி அலையே உயிர் என்றும், அந்த ஒலி நின்றுவிட்டால் சரீரம் சவமாகி விடுமென்றும், நமது சித்தர்கள் கூறுகிறார்கள். உலகம் என் பது சத்தம், உயிர் என்பது சத்தம் அப்படி என்றால் கடவுள் என்பதும் சத்தம் தானா? என்று கேட்டால் ஆம். ஒலியின் விந்தாக, நாத விந்தாக இறைவன் இருப்பதாக அனுபவித்து பார்த்தவர்கள் கூறுகிறார்கள்.

ஒடி விளையாடுகிற காலத்தில், உயர்த்தி பிடிக்கின்ற காற்றாடி சுற்றுகிற போது ஒரு ஓசை வருகிறது. மாட்டுவண்டியின் சக்கரம் சுற்றுகிற போது, ஒரு ஓசை வருகிறது. குழந்தையின் சிரிப்பிலும், குமரி பெண்களின் கலகல பேச்சிலும், பிணத்தின் முன்னால் வைக்கின்ற ஒப்பாரியிலும், ஒரு ஓசை வருகிறது. இப்படி அனைத்து செயல்களுக்கும் அதனதன் தரத்திற்கு ஏற்ற ஓசை வருகிற போது, உலகம் என்ற மிகப் பெரிய பந்து நிற்காமல், நிதானிக்காமல் யாருடைய கட்டளைக்கும் காத்திருக்காமல் சுற்றிக் கொண்டே இருக்கிறதே அதிலிருந்தும் பிரம்மாண்டமான ஓசை வரவேண்டுமே அது நமது காதுகளில் இதுவரை விழவில்லையே? அது ஏன் என்ற கேள்வியும், சிந்தனையும் நம் முன்னால் மலைபோல் நிற்கிறது.

சிறிய பொருளொன்று சுற்றினாலும் ஓசை வருகிறபோது, பெரிய பொருளான பூமி சுற்றுவ தனால் ஓசை வராதா என்ன? கண்டிப்பாக ஓசை வருகிறது. அது நமது காதுகளால் கேட்க முடியாத ஓசை. மனித காதுகளில் சக்திக்கு ஒரு எல்லை உண்டு. அவற்றால் மிக மெல்லிய ஒலிகளையும் கேட்க இயலாது. பிரம்மாண்டமான சத்தத்தையும் கேட்க முடியாது. பூமி சுற்றும்போது வருகிற சத்தம் பிரம்மாண்டமானது. அதை சாதாரண காதுகளால் கேட்க இயலாது. ஆனால், அந்த சத்தம் வேறு சில பொருட்களின் மீது பட்டு எதிரொலிக்கும் போது மனிதனால் சிறிது உணர்ந்து கொள்ள முடியும்.



மலைகளின் உச்சியின் மீது காற்று ஓங்கி வீசுகிற போது அந்த சத்தத்தை கேட்கலாம். மரங்கள் காற்றில் அசைகிறபோது அந்த சத்தத்தை, சண்ட மாருதம் என்ற சூறைக்காற்று வீசுகிற போது அந்த சத்தத்தை கேட்கலாம். கடல் அலைகள் ஓங்கி ஓங்கி தரையில் அடித்து, மீண்டும் கடலுக்குள்ளே செல்லுகிற போது அந்த சத்தத்தை கேட்கலாம்.

ஆலயங்கள், மண்டபங்கள், மைதா னங்கள், சந்தகடைகள் இவற்றிலிருந்து வருகிற மனித சத்தங்களை தூரத்தி லிருந்து கேட்கும் போது அந்த சத்தத்தை கேட்கலாம். மரங்களில் கூடு கட்டி குடும் பம் நடத்துகிற பறவைகள் எழுப்புகிற கூட்டுக்குரல் இசையிலும், வெண்கலம், இரும்பு, வெள்ளி இவற்றை ஒன்றோடு ஒன்று தாக்க செய்யும் போது எழும் ஓசையிலும் அந்த சத்தத்தை கேட்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக நெருப்பு கட்டுக்கடங்காமல் எரிந்தாலும் அந்த இடத்திலும் அந்த சத்தத்தை கேட்கலாம்.

இந்த சத்தங்களை பலமுறை நாங்கள் கேட்டிருக்கிறோம். இவைகள் எல்லாம் “ஓம்” என்ற ஓம்கார சத்தம் தானே இதற்கும் உலகம் சுற்றுவதற்கும் என்ன சம்மந்தமென்று நீங்கள் கேட்கலாம். நிச்சயம் சம்மந்தம் இருக்கிறது. உலகம் சுற்றுகிற சத்தமே ஓம்காரம் என்பது தான். பூமி மட்டுமல்ல பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து கோள்களுமே ஓம்கார நாதத்தில் தான் சுற்றி வருகிறது. இன்று நாம் கண்களில் காணுகிற, காணமுடியாத பொருட்கள் அனைத்துமே “ஓம்” என்ற சத்தத்தில் தான் அடங்கி இருக்கிறது. கடவுளும் கூட “ஓம்” என்ற உருவத்திலேயே இருப்பதாக மெய்ஞானிகள் கூறுகிறார்கள். பக்கம் சாராது பேசுவதில் வல்ல வன் என்று பேர் பெற்ற வள்ளுவன் கூட, அகரமுதல எழுத்தெல்லாம் என்று துவங்கி சர்வேஸ்வரனை அகர எழுத்தோடு ஒற்றுமைபடுத்தி காட்டுகிறார். அகரம் என்பதே ஓம்காரம் தான். ஓம் காரம் வேறு, அகரம் வேறு அல்ல.

குருஜி இப்படி உரையாற்றி கொண்டிருந்தபோது ஒரு அன்பர் பணிவோடு எழுந்து தங்கள் உரையின் போது குறுக்கீடு செய்வதற்கு மன்னிக்கவும். அடியேனுக்கு சிறிய சந்தேகம் இருக்கிறது. அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்றும் கலந்து தான் ஓம்காரம் என்று கூறுவார்கள். நீங்கள் கூட அதே அர்த்தத்தில் தான் வள்ளுவனின் குறளையும் குறிப்பிடுகிறீர்கள் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. எனக்கு வருகின்ற சந்தேகம் இதில் அல்ல. அகாரமும், ஓங்காரமும் ஒன்று என்பது தமிழ் மொழிக்கு மட்டும் தானா? தமிழ் மொழிக்கு மட்டும் தான் என்றால் ஓம் காரமே உலகத்தின் வடிவாக இருக்கிறது என்ற உங்கள் பொது கருத்தை ஏற்பது சிரமம் அன்றோ என்று கேட்டார். அவரது கேள்வியையும் உள்வாங்கி கொண்ட குருஜி தனது உரையை தொடர்ந்தார்.

அகாரம், உகாரம், மகாரம் என்பது தமிழ் மொழிக்கு மட்டுமே உரிய அட் சரங்கள் அல்ல. இன்று மனிதர்களால் பேசப்படுகிற மொழிகள் அல்லது பேச்சு வழக்கில் இல்லாத மொழிகள் ஆகிய அனைத்து மொழிகளுக்குமே இவைகள் சொந்தமானது. ஒவ்வொரு மொழியையும் எடுத்து, அதிலுள்ள உயிர் எழுத்துக்களில் ஓங்காரம் எப்படியெல்லாம் பரிமளிக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல எனக்கு ஆசை தான். ஆனால், சகல பாஷைகளும் அறிந்தவன் அல்ல நான். தாய் மொழியான தமிழை கூட ஒரு குழந்தையின் அளவிற்கு தெரிந்தவனாகவே இன்றுவரை இருக்கிறேன். இருந்தாலும் எனக்கு தெரிந்தவரையில் இதை விளக்குவது நலம் என்று கருதுகிறேன்.

தென்னிந்தியாவில் பேசப்படுகிற துளு, கன்னடம், தெலுங்கு, மலையாளம், மராட்டியம்




ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 ஜூன் 2018 33
www.aanmeegamalar.com

போன்ற மொழிகளாக இருக்கட்டும். வங்கம், குஜராத்தி, அசாமி, இந்தி, உருது போன்ற வட இந்திய மொழிகளாக இருக்கட்டும். அவைகள் அனைத்துமே நமது தமிழை போலவே எழுத்து அமைப்புகளை ஏறக்குறைய பெற்றிருக்கின்றன. எனவே அவற்றிலும் அ, உ, ம போன்ற எழுத்துக்கள் ஒரே மாதிரியாகவே அமைந்து ஒம்ஹாரத்தை சொல்லுகின்றது. இன்று உலக மொழி என்று போற்றப்படுகிற ஆங்கிலத்திலும் ணீ, வீ, னீ ஆகிய உயிர் எழுத்துக்கள் ஓம் காரத்தை காட்டுகிறது. அரபு மொழியில் முதல் எழுத்தாக அறியப்படும் அம்ஸா என்ற எழுத்தும், அகர வரிசையில் முதல் எழுத்தாக வருவதை வைத்தும், பாரசிக மொழியில் அலிப் என்பது முதல் எழுத்தாக இருப்பதை வைத்தும், மொழிகள் அனைத்திற்கும் மூலமாக இருப்பது ஓம்காரமே என்று நாம் உறுதியாக கூறலாம்.




இவைகள் மட்டுமல்ல உலகில் பல மதங்கள் இருப்பதை நாமறிவோம். அந்தந்த மதங்கள் இறைவனுக்கு பற்பல பெயர்களை கொடுத்திருப்பதையும் நாமறிவோம். அந்த பெயர்களை எல்லாம் எடுத்து, ஆராய்ச்சி செய்தோம் என்றால் அதிலும் "ஓம்" என்ற வார்த்தை மறைந்திருப்பதை அறிந்து, மறைத்து போகவேண்டிய நிலை இருக்கிறது. ஏறக்குறைய இந்து மதத்தை ஒட்டிய வயதுடைய பாரசிக மதமான சொராஸ்திரிய மதத்தில் கடவுளை அஜூர் மஸ்ட் என்று சொல்வார்கள். இதிலுள்ள ணீ, ஷ், னீ என்ற எழுத்துக்கள் அ, உ, ம என்ற எழுத்துக்களுக்கான ஒம்ஹாரத்தையே அழுத்தம் திருத்தமாக சொல்லுகிறது. சீனா, ஜப்பான், தாய்லாந்து, திபெத் முதலான நாடுகளில் லாமக்களின் கருத்துப்படி இறை சக்தியினுடைய பெயர் மனி பத்மி ஹோம் என்ற சொல்லாகும். இந்த சொல்லினுள்ளும் "ஓம்" ஒளிந்திருப்பதை தெளிவாக காணலாம்.

யூதர்களில் தெய்வத்தின் பெயர் ஜெஹோவா. இந்த ஹிப்ரு மொழியினுடைய வார்த்தைக்கு நான் இருக்கிறேன் என்பது பொருளாகும். இதை யப என்றும் அழைப்பார்கள். இதிலுள்ள மீ, ணீ, ஷீ என்ற எழுத்தும், பிரணவ மந்திரத்தை குறிக்கும் எழுத்தாகும். கிறிஸ்தவ மதத்தில், இறை வழிபாட்டை முடித்தபிறகு பிரார்த்தனைகளை செய்தபிறகு ஆமென் என்று கூறுவது வழக்கம். என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்றாக அறிவோம். இந்த ஆமென் என்ற வார்த்தை ஓம் என்ற வார்த்தையின் திரிபு என்பது சொல்லாமலே விளங்கும். ஓம் என்பது தான் உலகமாக இருக்கிறது என்று இந்துமத நூல்கள் குறிப்பிடுவது போலவே கிறிஸ்தவ பைபிள் ஆதியாகமத்தில் முதலாம் அத்தியாயம் முதலாம் வசனத்திலேயே ஆதியில் வார்த்தை மட்டுமே இருந்தது அந்த வார்த்தையே கடவுளாக இருந்தது என்று கூறுவது நன்கு கவனித்து பார்த்தால் ஓங்காரத்தின் நிலைப்பாடு என்னவென்று புரியும்.

இன்று இந்து மதத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று தனித்தே பிரிந்து நின்று, முறைப்போடு இருக்கின்ற நமது சகோதரர்களின் மதமான இஸ்லாம் மதத்திலும் கடவுளை குறிக்கும் வார்த்தையாக அலிப்_லாம்_மீம் என்ற வார்த்தை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக குரானில் கருதப்படுகிறது. இந்த சொல்லின் உள்ளாக இருக்கும் ணீ, றீ, னீ என்பதும் அ, வு, ம என்பதற்கும் அதிக தூரம் இல்லை என்பது தெளிவாக தெரியும். இப்படி உலகில் உள்ள சகல பொருட்களிலும் ஒம்ஹாரம் என்ற ஓம் என்ற பிரணவ மந்திரம் மறைந்திருக்கிறது. இந்த ஓம் சாதாரணமானது அல்ல மந்திரங்களுகேல்லாம் உயர்ந்தது. அரச மந்திரம் காயத்திரி என்று கூறுவார்கள். ஆனால் அந்த காயத்திரியை விட ஆயிரம் மடங்கு உயர்வானது ஓம் என்ற மந்திரம். அதனால் தான் பகவான் கிருஷ்ணன் தனது பகவத் கீதையில் ஏழாம் அதிகாரம், எட்டாவது ஸ்லோகத்தில் எல்லா வேதங்களிலும் நானே ஒம்ஹாரமாக இருக்கிறேன் என்று கூறுகிறான்.

ஒம்ஹாரத்தில் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய மூன்று உலோகங்களும், பஞ்ச பூதங்களும், மனிதனது பத்து இந்திரியங்களும் அடங்கி இருப்பதோடு மட்டுமல்ல. இறைவனை கண்ணுக்கு காட்டுகிற வடிவமாகவும், காதுக்கு கேட்கிற ஒலியாகவும் இருக்கிறது. இதை உணர்ந்து கொண்டு தினசரி பிரணவ மந்திரத்தை யார் சொல்கிறார்களோ அவர்கள் வாழ்க்கையில் சர்வ மங்களமும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை..

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434





# மலேசியா வருகிறார் குருஜி






மலேசிய நாட்டின் நலம் வேண்டியும் மலேசிய மக்களின் வளம் வேண்டியும் "இல்லந்தோரும் எம்பெருமான் நாராயணன்" என்ற தெய்வீக திட்டத்தை துவக்கியுள்ளர் சனாதன தர்மத்தின் தொண்டரும் இறைவன் நாராயணனின் திருவடியை தியானிப்பவருமாகிய

**"யோகி ஸ்ரீ ராமானந்த குரு"**

தங்களின் சகல கஷ்டங்களும் விலக வேண்டும் இன்னல்கள் மறைந்து இனியவைகள் உதயமாக வேண்டும் பாவமும் சாபமும் மறைந்து புதிய வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்புகிற மலேசிய குடும்பத்தார் இந்த தெய்வீக நிழ்வில் கலந்து கொள்ளலாம்

பகவான் ஸ்ரீ நாராயணனின் பரிபூரண அருளை பெற்ற குருஜி அவர்களின் சத்சங்கத்தையும் ஆசிர்வாதத்தையும் நேரடியாக அனைவரும் பெறலாம்

மக்கள் அனைவரும் ஸ்ரீமத் நாராயணனின் அருளை பெற வேண்டும் என்பது மட்டுமே குருஜியின் நோக்கம் எனவே அன்பளிப்புகள் காணிக்கைகள் என்று எதுவுமே அவசியம் இல்லை அனைவருக்கும்

**இடம்:**

**அனுமதி இலவச**

Sri Subramaniar Swamy Temple,
Batu Caves, Selangor

**நாள் 10.6.2018 நேரம்: 5 pm to 9 pm**

**மேலும் விபரங்களுக்கு**

**மலேசியா தொலைபேசி எண்: 0173752195**

# மிகப்பெரிய கைகளால் செய்யப்பட்ட கைலாஷ் மலை

கைலாஷ் மலையை இதுவரை ஏறியவர்கள் எவரும் இல்லை! முயற்சித்தவர்கள் வயோதிகர்களாக இறந்தது மட்டுமே மிச்சம்! இதன் மர்மம் என்ன? மலை மொத்தமும் ஸ்ரிமிகி மூலக்கூறுகள்! வியந்த விஞ்ஞானிகள்!

12 மணி நேரம் கைலாஷ் மலை ஏறினால் மனித உடல் இரண்டு வாரத்திற்கான வளர்ச்சியை பெறுகிறது. நகம், முடி அனைத்தும் இரண்டு வாரத்திற்கான வளர்ச்சியை பெறுகிறது! இது வரை யாராலும் கைலாஷ் மலையை முழுமையாக ஏறியதில்லை. ஏற முயற்சித்தவர்களும் திரும்பியதில்லை.

Dr Ernst Muldashev இரஷ்ய விஞ்ஞானி:

எர்நெஸ்ட் முல்டஷேவ் என்னும் இரஷ்ய விஞ்ஞானி கைலாஷ் மலையில் உள்ள இரகசியங்களை உடைத்தெரிய எண்ணினார். அதன்படி கைலாஷ் மலையை ஆராய்வதற்காக வந்தார். இதுவரை ஏன் எந்த மனிதனாலும் கைலாஷ் மலையை ஏற இயலவில்லை என்பது குறித்து ஆராயத் தொடங்கினார். பல திபெத்தியர்கள் மற்றும் சைபீரியர்களிடம் விசாரித்ததில் கைலாஷ் மலையில் ஷம்பாலா என்னும் குடிகள் வாழ்ந்து வருவதாக தெரிவித்தனர். முதலில் நம்பாமல் இருந்த இரஷ்ய விஞ்ஞானி பிறகு இரவில் மலையை சுற்றி ஏற்பட்ட சத்தத்தை வைத்து மலையின் உள்ளே யாரோ வசிப்பதாக உறுதிபூண்டார். அதுமட்டுமல்லாமல் இந்த உலகின் ஒட்டு மொத்த உயிர்களின் வாழ்க்கையும் இங்கிருந்துதான் தொடங்குகிறது என்றும் அவர் கருதினார்.


Mysterious Mount Kailash: Secrets Of The Man-Made Pyramid And Entrance To The City Of The Gods

AncientPages.com | October 27, 2014 | Ancient Places, Civilizations, Featured Stories, News

Share this:

A. Sutherland - AncientPages.com - Mount Kailash, which means "precious jewel of eternal snow" remains a place shrouded in mystery and legend.

According to ancient beliefs, this enigmatic Tibetan mountain represents the axis of the world or the stairway to heaven. In many eastern countries Mount Kailash is considered the holiest place on Earth. Some ancient sources say this is where we can find the mysterious city of the gods.

Mount Kailash was home of Lord Shiva.

Located around four long rivers, the Indus River, the Sutlej River, the Brahmaputra River, and the Karnali River, Mount Kailash remains a very sacred place and a great repository of mystical knowledge.

Considered as the holy abode of Lord Shiva, the mountain is currently considered unconquered. ... tain, since that would be sacrilege and cause misfortune.

A man-made pyramid?

Search the site

Ancient Pages Premium

Become A Member And Explore:

- Ancient mysteries
- Hidden history
- Alternative ancient history
- Unexplained phenomena
- Secret ancient knowledge

Learn More

Premium Member

Login

Latest Premium Articles

- Unraveling The Mystery Of A Lost Biblical Underground World – Is A Precious Ancient Artifact The Answer?
- Ancient Mysteries Of The Amazon Jungle – Survivors Of The Great Flood Or An Atlantean Race Hidden In The Forest? – Part 2
- Ancient Mysteries In The Amazon Jungle – Strange White Men With Glowing Eyes – Part 1
- Sacred Ancient Texts Reveal Who Really Aligned The Oldest Monuments To The Stars
- From An Underground World?

**வயதாகி இறக்கும் மர்மம்:**

இந்த மலையை ஏற முயற்சித்த அனைவரும் வயதாகி இறந்திருந்தனர். அதாவது 24 வயது மதிக்கத்த ஆள் மலையை ஏற முயற்சித்தால் 90 வயதானவராக மாறி வயோதிகம் காரணமாக இறந்திருக்கிறார். எவ்வாறு குறுகிய காலத்தில் இவ்வாறு வயதாக சாத்தியமாகும் என்பது விஞ்ஞானிகளுக்கு இன்றளவும் விந்தையாகவே உள்ளது.

**DNA வடிவம்:**

இரஷ்ய விஞ்ஞானி எர்னஸ்ட் முல்டஷேவ் கைலாய மலை மொத்த மலையையும் திட்ட வரை படமாக தீட்டினார். தீட்டி முடித்து பார்த்ததும் அதிசயித்துப் போனார். மொத்த வரைபடமும் DNA வடிவில் காட்சியளித்தது. இது அவருக்கு பெருத்த ஆச்சரியத்தையும், ஒட்டு மொத்த உயிர்களின் வாழ்க்கையும் இங்கிருந்துதான் தொடங்குகிறது என்ற அவரது எண்ணமும் முற்றிலும் உண்மைதான் என்ற தகவலை அளித்தது.

**மனிதனால் செய்யப்பட்டதா?**

அவரின் ஆராய்ச்சியின் முடிவில் ஒட்டுமொத்த மலையையும் (Pyramid) மனிதனின் பெரிய கைகளால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று முடித்தார். இவ்வளவு பெரிய மலையை செய்யும் பெரிய கைகள் எந்த உயிரினத்துக்காவது இருக்கிறதா என்ன?

**ஆதாரம்:**

https://www.rbth.com/blogs/tatar_straits/2017/02/24/when-a-russian-doctor-tried-to-crack-the-mystery-of-the-abode-of-lord-shiva_707558

http://www.ancientpages.com/2014/10/27/mysterious-mount-kailash-secrets-of-the-man-made-pyramid-and-entrance-to-the-city-of-the-gods/



மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து புத்தகங்களையும் படித்து மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...



# எடையை குறைத்து காற்றை சுவாசிக்கும் கல் கருடன் உருவான விதம்

செங்கட்பெயர் கொண்ட செம்பியர்கோன்' என்றும், 'காவிரிக்கரையெங்கும் எழுபது மாடக் கோயில்களைக் கட்டியவன்' என்றும் பெயர் பெற்ற கோச்செங்கட்சோழன்.

தேவசேனாபதியாரின் சிற்பக் கூடத்தில் பயின்ற மாணவன் மயூரசன்மன். முப்பத்தியிரண்டு சிற்ப நூல்களையும், பதினெட்டு உப நூல்களையும் கரதலப் பாடமாக அறிந்தவன்.

அது மட்டுமல்ல, இரு திங்களாக 'யந்த்ர சர்வாஸ' மந்திரத்தையும் உபதேசித்திருக்கிறேன். நீ எழுப்பும் அத்தனை ஆலயங்களுக்கும் தேவையான எந்த சிற்பத்தையும் வடித்துத் தரக்கூடியவன்'' என்றவர், சற்றுத் தள்ளி நின்ற சீடனை நோக்கி, நீ சென்று மயூரசன்மனை அழைத்து வா'' என்றார் தேவசேனாபதி.

சற்று நேரத்தில் உள்ளே நுழைந்து மன்னனையும் சிற்பியையும் வணங்கி நிமிர்ந்தவனின் பிராயம் இருபதுக்கு மேலிராது. கறுத்துச் சுருண்டு தோள்களை எட்டிய குழல்களும், அகன்ற நெற்றியில் சந்தனமும், விழிகளில் தீட்சண்யமுமாக நின்றவனைக் கண்டதும் மன்னன் முகத்தில் திருப்தி தெரிந்தது.

இவன் மயூரசன்மன், எனது பிரதான சீடன். உனது ஆலயப் பணிக்கு இவனை அழைத்துக் கொண்டு போகலாம் மன்னா'' என்ற சிற்பி, முதலில் இவனை எங்கு அழைத்துச் செல்லப்போகிறா?'' என்றும் வினவினார்.

மன்னனிடமிருந்து பதில் உடனே வந்தது, திருநறையூருக்கு'' என்று.

'செந்தளிர் கோதிக் குயில் கூவும்' திருநறையூரின் ஆலயத்தை மன்னனுடன் அடைந்த மயூரசன்மனின் பார்வை திருக்குளத்தை ஒட்டி அடுக்கப்பட்டிருந்த பாறைகளின் மேல் விழுந்தது. பார்த்தவுடன் அவை கங்க நாட்டிலும் குவளாலபுரியிலும் விளையும் நீரோட்டமிக்க அடுக்குப்பாறைகள் என்பது புரிந்தது அவனுக்கு.

மயூரசன்மனின் விழிகள் பாறைகளை வெறிப்பதையும், அவற்றில் விரிந்த கனவையும் கவனித்த மன்னன், அவனை நெருங்கினான்.

மயூரா... ஏன் அந்தப் பாறைகளை அப்படிப் பார்க்கிறா?'' என்றான் மன்னன்.

மன்னவா, இந்த ஆலயத்தில் நான் செய்துக்க வேண்டிய சிற்பம் எது?'' மயூரனின் பதில் கேள்வி யாகவே வந்தது. அவனது குரலும் கனவிலிருந்து ஒலிப்பது போலிருந்தது.

இங்கு எம்பெருமானுக்கு திருமணத்தை நடத்திவைத்த பெரிய திருவடியான கருடனைத் தான். மூலவரின் உயரமான ஆகிருதிக்கு ஏற்ற வடிவில் வடிக்க வேண்டும்‟ என்றான் மன்னன்.

மன்னவா, இந்த அடுக்குப் பாறைகள் பூமியின் நீரோட்டங்களுக்கு நடுவிலிருந்தவை. இவற்றுள் சில வற்றில் நீரோட்டம் கடந்து சென்ற மெல்லிய பாதைகள் இருக்கும். அவற்றைத் தேர்ந்தெடுத்து, சுத்தப்படுத்தினால் காற்று ஊடே செல்லும் பாதைகிட்டும். காற்று சென்று வரக்கூடிய வழி கிடைத்தால் இவை சுவாசிக்கும் பாறைகளாகும்.

மனிதருக்கு சப்த நாடிகள் உள்ளது போல் இவற்றுக்கும் நாடிகள் உண்டு. காற்றை சுவாசிக்கும் எந்த ஜீவனும் பூமியின் விசையை எதிர்த்து நடமாடக்கூடியது. நாம் செய்யக் கூடிய சிற்பத்தின் நாசியில் அந்தப்பாதை வருமாறு அமைத்தால், சந்திரனின் ஒளியை உள்வாங்கும் சந்திர காந்தக் கல்லைப்போல் இவை பூமியின் விசைக்கெதிராக சக்தி பெறும். பின்னர், 'யந்திரசர்வாஸ' மந்திரமும் வடிக்கும் சிற்பத்துக்குண்டான மந்திரத்தையும் பிரயோகிக்கும்போது அவை உயிர்பெற்று விடும்.''

மன்னனுடன் ஆலயத்துள் நுழைந்த மயூரசன்மன் மூலவரின் இடப்புறம் உள்ள பகுதியைத் தேர்ந்தெடுத்தான். மன்னவா, அந்தப் பாறைகளைக் கொண்டு இங்கு மண்டபத்தை அமைக்கிறேன். இங்கிருந்து பிராகாரத்தில் இறங்கும் வழிநெடுக நான் கூறும்படி அந்தப் பாறைகளைக் கொண்டு பாதை அமைத்து விடுங்கள். மண்டபத்தின் பீடத்தில் பூமியின் விசை எதிர்ப்புறம் இருக்கும்படி அமைத்து விட்டால், கருட சிற்பத்தின் எடை மிகக் குறைவாகவே இருக்கும். அதே பாறைகளைக்கொண்டு வெளிப் பிராகாரம்வரை பாதையாக அமைத்து விடலாம்‟ என்றான் மயூரசன்மன்.

சரி மயூரா, அதனால் என்ன நிகழும்?'' என்றான் மன்னன்.

மயூரசன்மனின் விழிகள் மின்னின. மன்னா, மூலவரின் உயரத்துக்கும் ஆகிருதிக்கும் ஏற்றபடி சுமக்கும் கருடனுக்கும் உருவம் அமைத்தால் ஆயிரம் மடங்கு எடையும் அதிகமாக இருக்கும். ஆனால், அந்த எடை இந்த மண்டபத்தில் பத்து மடங்கு குறை வாகவே இருக்கும். கருடன் புறப்பாடு காணும் போது கருடனைத் தூக்க நால்வரே போதும். மண்ட பத்தை விட்டுக் கீழிறங்கினால் தூக்குபவர் எண்ணிக்கை இரு மடங்காக வேண்டும்.

பாதை நெடுக நான் அமைக்கும் அடுக்குப் பாறைத் தளத்தில் ஈர்ப்பு விசை பாதிப்பாதியாகக் குறைந்துகொண்டே வரும். எனவே, மேற்கொண்டு செல்லச் செல்ல கருடன்தன் சுய எடையைப் பெற்றுவிடுவார். அப்போது தூக்கு பவர் எண்ணிக்கையும் இரண்டிரண்டு மடங்காக உயர்ந்துகொண்டே செல்லும். மீண்டும் மண்டபத் துக்குத் திரும்பி வரும்போது அதே எண்ணிக்கையில் எடை குறைந்துகொண்டே வரும்‟ என்றான் மயூரசன்மன்.

செங்கட்சோழனின் முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. அப்படியே செய்துவிடு மயூரா. உனக்கு உதவியாக கல் தச்சர்களையும், ஆட்களையும் இப்போதே ஏற்பாடு செய்கிறேன்'' என்றான் மன்னன்.

தமிழகத்தின் சிற்பக்கலை அதிசயங்களில் ஒன்றாக விளங்கும் மயூரசன்மன் வடித்த அந்தக் கல் கருடன் இன்றளவும் அப்படியே #நாச்சியார் கோயில் என்று அழைக்கப்படும் #திருநறையூரில் நிற்கிறது.

மார்கழியிலும் பங்குனியிலும் பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. கருட சேவையின்போது பிரம்மாண்டமான அந்தக் கல் கருடனை முதலில் நால்வரும், மண்ட பத்தை விட்டு இறங்கியதும் எண்மரும், பின் வெளிப் பிராகாரத்துக்கு வரும்வரை இரண்டிரண்டு மடங்காக அறுபத்திநான்கு பேர் வரை தூக்கி வர வேண்டியிருக்கிறது. அதுமட்டுமின்றி, ஆலயத்தை விட்டு வெளி வந்ததும், கல் கருடனின் மேனியில் மனிதர்களைப் போல் வியர்வை வழியத் தொடங்குகிறது !..

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.